உ





# ஞானச்சுடர்

## மலர்

ஆவணி 2003




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ

## குறள் வழி

" மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினும் முந்து "

பொருள்:-

விடத்தக்க சோம்பலைத் தன்னுள்ளே
கொண்டொழுகும் அறிவில்லாதவன்
பிறந்த குடி அவன் இறப்பதற்கு
முன்பே அழிந்து போம். [603]



(தொடர்ச்சி...

உ

# நற்சிந்தனை

## நல்லூர் வெளியில்


### கலிவிருத்தம்

ஆவதும் இல்லை அழிவதும் இல்லை
போவதும் இல்லைப் புகுவதும் இல்லை
தேவரும் இல்லைத் திசைகளும் இல்லை
யாவரும் இல்லை யார்தான் அறிவார்

அயலறி யாத ஆனந்தம் பெற்றேன்
மயலறி யாத மௌனத்தில் உற்றேன்
செயலறி யாத சிவத்தினைக் கற்றேன்
இயம நியமாதி யாவையு மற்றேன்

ஆணில் பெண்ணும் பெண்ணில் ஆணும்
தூணில் துரும்பும் துரும்பில் தூணும்
காணுங் கண்ணுங் காணாத கண்ணும்
பேணும் அடியார் பிறப்பற் றாரே (வளரும்...

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு—2 சுடர் 68

## 2003 ஆவணி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முருகன் பெருமை | 1 - 4 |
| எங்கே நிம்மதி | 5 - 6 |
| அன்பே சிவம் | 7 - 8 |
| நடராஜ தத்துவம் | 9 - 11 |
| மனத்தூய்மையினால்...... | 12 - 14 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்...... | 15 - 18 |
| நித்திய அன்னப்பணி | 19 - 23 |
| அரை நிமிட நேரம் | 24 - 25 |
| ஒளவையார் அருளிய ..... | 26 - 28 |
| சந்நிதியான் | 29 - 33 |
| மயில்வாகன சுவாமிகளின்...... | 34 - 35 |
| மகோற்சவகால நிகழ்வு | 36 - 37 |


அன்பளிப்பு:- மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால்ச் செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு

உ

# "தாள் பணிந்து கேட்டுப்பார்"

நிரம்பிய சுகம் பெற வேண்டின்
　　நீ சந்நிதிக்கு வந்து பார்
நீள்நிலத்தில் வெல்ல வேண்டின்
　　நீ சந்நிதியில் இருந்து பார்
பரம்பொருளை உணர வேண்டின்
　　பரவிடும் அடியாரைப் பார்
பயமின்றிப் போக வேண்டின்
　　பிரசாதத்தை உண்டு பார்
வரமொன்று வாங்க வேண்டின்
　　வலமாக வந்து பார்
வருத்தங்கள் அகல வேண்டின்
　　வல்ல தீர்த்தம் ஆடிப்பார்
தரமான கல்வி வேண்டின்
　　திருப்புகழைப் பாடிப்பார்
தக்க நீதி கிடைக்க வேண்டின்
　　தாள் பணிந்து கேட்டுப் பார்!

கே. எஸ். சிவஞானராஜா

# சுடர் தரும் தகவல்

பொதுவாக ஒரு மனிதனது வாழ்க்கை ஆத்மீகம், லௌகீகம் ஆகிய இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந்த இரண்டு வகையான அம்சங்களையும் எடுத்து நோக்கும் போது இவை ஒவ்வொன்றிலும் சிறப்பான நிலையை அடைவதில் பலவிடயங்கள் தொடர்புபட்டிருந்தாலும் இவை இரண்டிற்கும் பொதுவாகக் கூறக்கூடியதாக ஒரு விடயம் அமைந்துள்ளதை நாம் உணர முடிகின்றது.

ஆத்மீக வாழ்க்கைக்கு ஒரு குருவினது நேரடியான பங்களிப்போ அல்லது மானசீகமான ஒரு குருவைப் பின்பற்றி ஒருவர் செயற்படுவதோ அவசியமாக உள்ளதை நாம் காண முடிகின்றது. செல்லப்பாசுவாமிகளது குருவருள் யோகர் சுவாமிகளை ஆற்றுப்படுத்தியது இந்தக் குருவருளே யோகர் சுவாமிகளது தெய்வீக வாழ்க்கையில் காரணமாக அமைந்தது. சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சரின் குருவருள் தான் சுவாமி விவேகானந்தர் ஆத்மீக வாழ்க்கையில் மிகவும் உயர்வான நிலையை அடைவதற்கும் அவர் உலகம் போற்றும் உயர்ந்த ஆத்மீகத்தலைவராகவும் உயர்வதற்குக் காரணமாக இருந்தது. அதே போன்று சந்நிதியான் ஆச்சிரமம் அதைச்செயற்படுத்தும் மோகனதாஸ் சுவாமிகளின் செயற்பாடு என்பவற்றிற்கெல்லாம் மயில்வாகன சுவாமிகளின் குருவருள் தோன்றாத்துணையாக இருந்து செயற்பட்டுக்கொண்டிருப்பதையும் நாம் உணரமுடிகின்றது.

இது போன்றதொரு நடைமுறை தனிப்பட்ட மனிதனது லௌகீக வாழ்க்கையில் உயர்வதற்கும் காரணமாக இருப்பதை நாம் காணமுடிகின்றது. உதாரணமாக ஒருவன் கல்வியில் முன்னேற்றமடைவதற்கு நல்ல ஆசான்களது வழிகாட்டல், நல்ல நண்பர்களது சகவாசம் என்பன எல்லாம் அவசியமாகின்றது. தொழில் ஸ்தானத்தில் ஒருவர் உயர்வடைவதற்கும் நல்லவழிகாட்டல், நல்லவர்களது ஆதரவு என்பன அவசியமாக உள்ளது. இதே போன்று சமூகவாழ்க்கையில் ஒருவர் உயர்வதற்கும் நல்லவர்களது வழிகாட்டல் முன்மாதிரி என்பன இருப்பது அவசியமாகின்றது.

இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால் இவ்வுலகில் மனித நேயம், பரஸ்பரம். நல்லுறவு, ஒற்றுமை, பெரியோரைமதித்தல் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்ந்தால், எங்களால் மட்டும் எதனையும் தனித்து சாதிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து ஆணவம் அகம்பாவம் என்பவை அற்று அமைதியான வாழ்க்கையை வாழ முடியும்.

# ஞானச்சுடர்
# ஆடி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :**

வெளியீட்டுரையை Dr. V. பாலகிருஸ்ணன் அவர்கள் மேற்கொண்டார்கள். திரு. V. பாலகிருஸ்ணன் அவர்கள் ஆச்சிரமம் பேரவை தொடர்பாக தனது உள்ளக்கிடக்கையை மிகத்தெளிவாக வெளிப்படுத்தினார்கள். ஆச்சிரமமும் பேரவையும் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு செயற்பாடுகளை அடியார்களுக்கு எடுத்து விளக்கினார்கள். அந்த வரிசையில் ஞானச்சுடர் மலரையும் சிறப்பாகவும் குறிப்பிட்ட கால ஒழுங்கிலும் வெளியீடு செய்கின்ற சிறப்பையும் அடியார்களுக்கு சுட்டிக்காட்டினார்கள்.

**மதிப்பீட்டுரை :**

மதிப்பீட்டுரையை திரு ஜெகா ஆறுமுகசாமி அவர்கள் வழங்கினார்கள் குறிப்பிட்ட நபர் வருகை தராத காரணத்தால் திரு. ஜெகா ஆறுமுகசாமி அவர்கள் மதிப்பீட்டுரை தொடர்பான பொறுப்பை ஏற்று செயற்பட்டார்கள்.

ஞானச்சுடர் மலரில் வெளியிடப்படும் கட்டுரைகளை தான் தவறாது வாசித்து வருவதாயும் அந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் உயிரோட்டமுள்ள நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தி வருவதாயும் குறிப்பிட்டார்கள்.

இந்தக் காரியங்களை எல்லாம் இவ்வளவு சிறப்பாகச் செய்வதற்கு எம்பெருமானுடைய திருவருளே துணையாக இருப்பதையும் அடியார்களுக்கு சுட்டிக்காட்டினார்கள்.

உ

# ஆவணி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

பிரம்மஸ்ரீ கு. தியாகராஜ சர்மா ( நீர்வைமணி )
[ நீர்வேலி ]

**M.** இந்திரசேகரம்
( அவுஸ்திரேலியா )

**R.** இரவீந்திரன்
( அவுஸ்திரேலியா )

**S.** பாலசிங்கம்
( லண்டன் )

**K.** கனகசபேசன்
( கனடா )

**T.** சண்முகவரதன்
( அவுஸ்திரேலியா )

K. கோபாலகிருஷ்ணா
( அவுஸ்திரேலியா )

**S.** வில்வராசா
( மலேசியா )

ஐ. தங்கேஸ்வரன்
( சம்பத் வங்கி, கொழும்பு )

இ. குமாரகுலசூரியர்
( புகையிரத நிலையம் வவுனியா )

வை. கதிர்காமதாசன்
( திருமலை )

க. சிவஞானசுந்தரம்
[ அச்சுவேலி வடக்கு ]

இ. பரமசாமி
[ கொல்லோலை, உடுப்பிட்டி ]

ச. இராஜேஸ்வரன்
[ கரந்தன் நீர்வேலி மேற்கு ]

சீ. கந்தசாமி
[ இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு ]

சி. பஞ்சலிங்கம் ( லிகிதர் )
( கிராமிய வங்கி ப. நோ. கூ. சங்கம் உடுப்பிட்டி )

கு. ஸ்ரீமுருகமூர்த்தி
( கிளை, முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம் உடுப்பிட்டி )

செ. அட்சயலிங்கம் ( ஆசிரியர் )
( அல்வாய் )

அ. தில்லைநாதன்
( இளைப்பாறிய அதிபர் சிவன் வீதி, ஆவரங்கால் )

மூ. சிவலிங்கம்
( காரைக்கால் வீதி, இணுவில் )

ஜென்ஸ் சிவஞானம்
( பிரான்ஸ் )

உ

# முருகன் பெருமை

க. வச்சிரவேல் முதலியார் *B. A., L. T.*



உலகில் உயர்ந்த பிறப்பெடுத்த மக்கள் அப்பிறப்பால் அடைவதற்குரிய சிறந்த பேறு உலக முதற் பொருளாகிய இறைவனைத் தலைப்பட்டுணர்ந்து பேரின்பம் எய்துதலே ஆகும். இதனையே நக்கீரர் ''செவ்வேற் சேஎய் - சேவடி படரும் செம்மல் உள்ளமொடு - நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும் - செலவு'' எனவும், ''பெறல் அரும் பரிசில்'' எனவும் திருமுருகாற்றுப்படையிற் குறித்தருளினார். ஏனைய உலக நலன்களும் இறைவழிபாட்டால் எய்தற்பாலனவே ஆம். ''சிற்றம்பலம் மேய- செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே'' என்றருளிச் செய்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவுள்ளக்கிடக்கை இதுவே. உலகப் பொதுமறை வகுத்தருளிய திருவள்ளுவனார்க்கும் கருத்து இதுவே என்பது அவர் நூலால் உணரப்படும்.

இறைவனது உண்மையியல்பு நம் மனமொழிகளைக் கடந்தது; ஆயினும், அவன் பேரருள் உடையவன். ஆதலின், அவன் தன்னை அன்பால் நினைந்து தொழுவார்க்கு, அவர் காணவும், கருதவும், பொருள்சேர் புகழைச் சொல்லவும், தொழுது இன்புறவும் ஆம்படி எளிவந்து, வெளிப்பட்டருளிய வரலாறுகள் பலப்பல. அங்ஙனம் முதல்வன் வெளிப்பட்டருளப் பெற்ற பெருமக்கள் தாம் கண்ட திருக்கோலத்தையும் பெற்ற பேறுகளையும் கிளந்தோதிய வாய்மொழிகளே பொருள்சேர் புகழ்

அழகு என்பது இதயத்தின் ஒளியேயாகும்.

எனவும், நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி எனவும் திருமுறைகள் எனவும், திருப்புகழ் எனவும் நம் தமிழகத்தே நிலவி வருகின்றன. அங்ஙனம் வெளிப்பட்டருளிய திருக்கோலங்களுள் திருமுருகன் திருஉருவங்களும் சேர்ந்தவை என்பது தெளிவு.

இவ்வடிப்படை உண்மையை "நானாவித உருவாய் நமை ஆள்வான்" எனத்திருஞானசம்பந்தரும், "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ" எனத் திருவாதவூர் அடிகளும் அருளிச் செய்தமை கொண்டு சிந்தித்துத் தெளியலாம்.

முதற்பொருளின் உண்மையியல்பாகிய கடவுள் நிலை மாற்ற மனங்கழிய நின்றது. ஆயினும், எவ்வாற்றானும் உணரப்படாதது அன்று. "உரை உணர்வு சிறந்து நின்று உணர்வதோர் உணர்வே" எனத் திருவாதவூர் அடிகள் கூறுகின்றார்; ஆதலால், மருட்கையுணர்வி னீங்கி அவாவறுத்தார்க்கு முதற்பொருள் அருளொளி விளங்கும் பேரின்ப வெளியாக அனுபவப் படுவதென்பதே மெய்யுணர்ந்தார் முடிபு. "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது" என்பது தாயுமான அடிகள் திருவாய்மொழி. ஞானத்தால் தொழும் சிவஞானியருக்கு உணரவரும் போதஉருவ அருளொளியே பராசத்தி (மேலான ஆற்றல்) எனவும், மோனபரானந்தமே பரசிவம் (மேலான, தூய, மாறுதல் இல்லாத பேரின்பம்) எனவும் இருவகைப்பட வைத்து உயர்ந்த நூல்களால் உணர்த்தப்படும்.

பராசத்தியைச் சித்து (அறிவு) எனவும், பரசிவத்தை ஆனந்தம் (இன்பம்) எனவும் கூறுதல் வேத வழக்காம். "ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம" (பெரிய அறிவுப் பிழம்பாயுள்ளது பெரும் பொருள்) என ஐதரேய உபநிடதமும், "ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" (பெரும் பொருளின் பேரின்பத்தை அறிந்தோன்) எனத்தைத்திரீய உபநிடதமும் கூறுகின்றன. தூய இயற்கைப் பேருணர்வும், ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமும் ஆகிய இவ்விரண்டும் ஒரே பொருளின் ஈரியல்புகளே ஆகும்; அப்பொருள் தோற்றக்கேடுகள் இன்றித் தூயதாய் என்றும் ஒரு படித்தாய் உள்ளது இக்கருத்துப் பற்றி அதனைச் சத்து என உபநிடதங்கள் உரைக்கின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவர் முதற்பொருளை மெய்ப்பொருள், உள்ளது, செம்பொருள், வாய்மை என்னும் பெயர்களாற் குறித்தருளுகின்றார்.

★ நல்லவனின் புன்முறுவல் உள்ளத்திலிருந்து தோன்றும். ★

இத்தகைய முழுமுதற் பொருளின் இயல்பைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் எல்லோருடைய மனத்தையும் கவரும் மாண்பும் இனிமையும் தூய்மையும் வாய்ந்த மலரோடு ஒப்பிட்டு மகிழ்ந்து உளங்கொண்டனர். இதனைப் ''பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப் போத இன்பம் ஆவண்ணம் மெய்கொண்டவன்'' என்னுந் திருவிளையாடற் புராணச் செய்யுளால் உணர்ந்தின்புறலாம். பூவின் பிழம்பும் அதன் வண்ணமும் (நிறமும்) போலப் பரமசிவனும் பராசத்தியும் பிரிப்பின்றிக் கூடியுள்ளனர். பூ தன்னை அடைந்தார்க்கே இன்பந்தருவது ஆயின், அதிலிருந்து முளைத்து விரிந்து பரவும் முருகு (மணம்) நாமிருக்கும் இடத்தில் வந்து இன்பு ஊட்டிப் பூவின் இருப்பையும் அதனை எய்துமாற்றையும் நினைப்பித்து உணர்த்துவது இங்ஙனம் பரம்பொருளினின்றும் முளைத்தெழுந்து எத்துணையும் எளியோமாய்க் கீழே உள்ள நம் நிலைக்குத்தக்கபடி இறங்கி வந்து அருள்புரியும் முதற்பொருளின் அதோமுக சக்தியே முருகு அல்லது முருகன் எனப்படும். அதோமுகம் கீழ்நோக்கிய முகம்.

திருமுருகன் எங்கும் சிவபிரானுடைய குமாரனாகவே கூறப்படுதல் உளங்கொளற்பாலது. பண்டைத் தமிழகத்தே 'பிள்ளையார்'' என்னுந் திருப்பெயர் குமாரக்கடவுளையே குறித்து வந்தது என்பதும் எண்ணுதற்கு உரியது.

முருகு என்னும் சொல் தெய்வத்தன்மை என்னும் பொருளைக் குறிக்கும் என்பர் நச்சினார்க்கினியர். பூவின்கண் அடங்கியிருந்து அது மலரும் போது வெளிப்பட்டு விரிந்து அப்பூவினையும் தன்கண் அடங்கக்கொள்வது பூவின் மணம்: அதுபோல, உயிரின் கண்ணும் உலகத்துப் பொருள்களினும் காணப்படாது அடங்கி நின்று பின் அன்பின் முதிர்ச்சியால் வெளிப்படுவதே தெய்வத்தன்மை: இதனைப் பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது'' என்னும் திருமந்திரத்தாலும், ''உற்ற ஆக்கையின்உறு பொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல் -பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'' என்னும் திருவாசகத்தாலும் தெளிந்து கொள்க. எத்துணையும் அரிய பெரிய சிவபிரான் எத்துணையும் எளிய, கடைப்பட்ட உயிர்கள் உலகவாழ்வில் அழுந்தித் துன்புறுங் காலத்துத் தன்னை நினைப்பின், அவர் நினைந்த உருவில் விரைந்து சென்று இடுக்கண் தீர்த்து அருள்புரியும் கருணைத் திறமே பண்டைத் தமிழ்ச் சான்றோர்களால் முருகு எனப்பட்டது என்பது இதனால் இனிது விளங்கும்.

நக்கீரர் முருகப்பெருமானை இங்குக்கூறியபடியே எண்ணியுள்ளார் என்பது திருமுருகாற்றுப் படை வரலாற்றால் உணர்தல் கூடும். சிவபூசையில் நினைவு வேறு ஆனமை பற்றி ஒருபூதத்தால் மலைக் குகையில் அடைபட்டிருந்தபோது நக்கீரர்பின்வருமாறு எண்ணினார் எனச்சீகாளத்திப் புராணம் கூறுகின்றது:

'' வரைபுணர் குறிஞ்சி மன்னன் வரைபக எறிந்த செவ்வேள்
முருகலர் அலங்கல் திண்டோள் முருகன்என் றவன்பொற் றண்டைத்
திருவடி மலர்இ றைஞ்சில் தீவினை செல்லல் முற்றும்
பருதியங் கடவுட்கண்ட பனியென அகன்று போமால்;

'' ஆறிரு தடந்தோள் அண்ணல் ஆறெழுத்தினையும் ஓதில்
வேறொரு பிணிபோம் என்கை வியப்பதோ வியப்பஃதன்றே
மாறரும் அநாதி நோயும் மாறிவேதாக மங்கள்
கூறரும் இன்ப வீட்டிற் குடிபுகுந் திருப்பர் அன்றே;

'' ஐம்பெரும் பூதவாயின் அகப்படும் உயிரை மீட்டுச்
செம்பொனஞ் சிறுசதங்கைத் திருவடி நிழலில் வைக்கும்
நம்பிநம் குமர வேட்கிந் நாள்ஒரு சிறுபூதத்தால்
இம்பரிங் குறுநோய் தீர்த்தல் எளிதலால் அரியதன்றே;

'' இன்னன நினைந்து கீரன் இலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியும் ஆரப் பருகமு தாகிஓதில்
உன்னிய உன்னியாங்கிங் குதவுவதாகிப் பாவுள்
முன்னுற வந்துநிற்கும் முருகாற்றுப் படைமொழிந்தான்.

நக்கீரர் பாண்டியன் நன்மாறனை '' முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின் '' எனக் கூறுதலின், முருகன், தன்னை வழிபடுவோர் தம்குறையை எடுத்துரைக்கமாட்டார் ஆயினும், அவர் கருத்தறிந்து குறை முடிக்கும் தெய்வம் எனக்கருதி வந்தார் என்பது விளங்குகின்றது.

கலியுகவரதன் எனவும், தமிழ்த்தெய்வம் எனவும் ஓங்காரப் பொருளெனவும் உயர்ந்தோரால் எண்ணி இறைஞ்சப்படும் முருகப்பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துப்பெருஞ்சாந்தி செய்து வழிபடும் அன்பர்கள் அனைவரும் வேண்டிய வேண்டியாங்கு எய்தி மேம்படுக என வேண்டித் திருமுருகன் இணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

'' முருகன் குமரன் குகன்என் றுமொழிந்து
உருகும் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே. ''

---

அலங்கார அணிகலங்கள் சிறுமையின் சின்னம்.

உ

# "எங்கே நிம்மதி?"

கா. கணேசதாசன் J. P.

எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும். என்று நிம்மதி தேடிக் கவலைப் படுவோரின் எண்ணிக்கை இப்போது அதிகம். நாம் வாழும் சூழ்நிலையே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்று பலரும் கருதுகிறோம்.

அதாவது, தான், தனது குடும்பம், தனது உறவு, சமூகம். என்ற எல்லா மட்டங்களிலும் துன்பதுயரங்கள், அவலங்கள், நெருக்கடிகள். ஏமாற்றங்கள், தோல்விகள். இயலாமை, ஏழ்மை என்பன அதிகரித்துள்ளமையே மனநிம்மதி இல்லாதோர் எண்ணிக்கை பெருகுவதற்குக் காரணம் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

ஆனால், தம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கைச் சூழ்நிலை சுமுகமாக இருந்தாலும் கூடப் பலருக்கு நிம்மதி கிடைப்பதில்லை. நிம்மதி என்பது அவரவர் மனத்தைப் பொறுத்தே மலர்கிறது.

எல்லாம் அவன் செயல். எல்லாம் நன்மைக்கே. என்று கொள்ளும் மனத்தில் நிம்மதி ஏற்படும் சகல விளைவுகளும் பாதகமான பெறுபேறுகளைத் தருபவை எனப் பார்க்கும் மனம் நிம்மதி காண்பது கடினமானது.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆனால் மனிதர் பற்பலர் கிடைத்தது போதும் என்று மனத்திருப்தி கொள்வதில்லை, பேராசை பெரும் தரித்திரம், எதுவுமே போதாது என்ற பேராசை பாதகமான, நிம்மதியற்ற தீய விளைவுகளைக் கொண்டு வருகிறது.

நடப்பவை எல்லாம் நல்லனவே. கிடைப்பது போதும், அதற்கு மேல் ஆசை கொள்ளாது இருப்போம். கிடைத்ததைக் கொண்டு சமாளிப்போம் அழுக்காறு. அவா, வெகுளி, இன்னாச் சொல் இவற்றை அகற்றுவோம் நம்பிக்கையையும் முயற்சியையும் கைவிடா இருப்போம்,

✶ மனவுறுதியே சாதனை புரிவதற்கு வழி. ✶

இன்னா செய்தாருக்குக் நன்மை செய்யப் பழகுவோம். மனத்தால், மொழியால், மெய்யால் அறம் புரிவோம். அடுத்தவன் துயரத்திற் பங்குகொண்டு இயன்றளவில் உதவி செய்வோம் என்ற 'மனப்பாங்கை' மனப்பக்குவத்தை எட்டுவதே மன நிம்மதிக்கு உகந்த வழியாகும்.

தீய குணங்களை ஒதுக்கி நற்குணங்களை வளர்ப்பதுவும் மனநிம்மதிக்கு நல்ல மார்க்கம் உடம்புக்கு ஆடை எப்படியோ அப்படியே உள்ளத்துக்கு நல்ல குணங்கள் என்பதனை மறந்துவிடாமற் செயற்படுங்கள். அதன் மூலமும் மன நிம்மதியைப் பெறலாம்.

இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் நிம்மதியைப் பெற்றால், எமது நாடே நிம்மதியான அமைதியான, சாந்தி சமாதானம் மிக்க நாடாக மாறுமல்லவா?

# அருள் தாராயோ!

சங்கடம் தீர்க்கின்ற சன்னதி வேலா!
சங்கரன் புதல்வா சன்னதி வேலா!
உனைச் சரணடைந்தவர்க்கு பயமில்லை வேலா!
உத்தம குருவே ஆற்றங்கரை வேலா!

ஆறுதல் சொல்ல யாருமில்லை வேலா!
அச்சத்தை அடக்கிடும் ஆனந்த வேலா!
ஆனந்தம் அளித்திடும் அற்புத வேலா!
அன்பைப் பொழிந்திடும் அன்னை நீ வேலா!

சோதனைகள் தந்து நீ நடத்திடும் பரிட்சைகளால்
சோர்ந்தே போனேன் சன்னதி வேலா!
வேதனைகள் கொண்டு உனை நாடி வந்த போதெல்லாம்
சோர்வுதனைப் போக்கி சோகம் துடைத்த சன்னதிவேலா!

உன் அடியவள்படும் இன்னல் உனக்கு
புரியவில்லையா? அன்னதான வேலா!
அன்னையாய் இருந்து அமுதூட்டும் அன்னதான வேலா!
அன்னை நீ பிள்ளை. நானல்லவா சன்னதி வேலா!

உன் பிள்ளை நான்படும் துயர் கொண்டும் வேலா!
உன்னால் பார்த்திருக்க முடிகிறதா சன்னதி வேலா!
உன் பதிலைப் பார்த்து காத்து நிற்கும் அடியவளுக்கு
உன் அருளைத் தாராயோ!

திருமதி சத்தியா நந்தகுமார்

★ ஒழுக்கம் இல்லா அழகு மணமில்லா மலர். ★

உ

# " அன்பே சிவம் "

மூ. சிவலிங்கம்

முழுமுதற் கடவுளாம் சிவ பெருமான் தம்மை மெய்யன் போடு வழிபடும் பக்தனின் அன்புவலையில் உறைகிறார். இறைவன் எல்லா உயிர்களிடத் தும் இருக்கிறார் எம்முள் இருக் கும் இறைவன் எல்லா உயிர்க ளிடத்துள்ளும் இருக்கிறார் எனவே சிவத்தைச் சிவம் அன்பு டன் நேசிப்பது நற்பண்பாகும்.



ஓர் அன்புடையவன் பிற உயிர்களிடத்திடம் செலுத்தும் அன்பை அவ்வுயிர் அனுபவிக்கும் போது இருக்கும் மகிழ்ச்சியில் சிவத்தைக் காண்கிறான். நற் பண்புடையோர் பிறர் துன்பப் படும்போது அவர்களிடமுள்ள அன்பினால் தானும் மன வேதனையடைகிறான் வாடியபயி ரைக் கண்ட வள்ளலார் இராம லிங்க அடிகளார் அப்பயிர் மீது கொண்ட அன்பினால் தானும் மனம் வருந்துவார் ஒருவனுடைய இதயத்திலிருந்து அன்பென்னும் நல்லூற்று எல்லா உயிர்களிடத் தும் பாயும்போது மகிழ்ச்சியி னால் அவனும் நன்மையடைகி றான்.

பிரதிபலனை எதிர்பாராத ஒரு தாயானவள்கருவுற்ற காலம் முதல் தன்பிள்ளை மீது தன் உயிருள்ளவரை அன்பு செலுத்து கிறாள். அவளின் நற்பண் புள்ளபிள்ளை தாய் மீதுள்ள அன்பினால் தாயைத் தெய்வ மாகக்கண்டு போற்றுகிறது குரு விடத்தில் சீடன் அன்பான பக்தி மேலீட்டால் சிறந்த விசுவாசி ஆகிறான் இதனால் குருவும் தனது சீடனின்மீது அன்புடனும் பரிவுடனும் கற்றவை கற்றாங்கு நிறைவுறும்போது அன்புடன் நல்லாசி வழங்குகிறார். இவ்வி டத்தில் இருசீவன்களான சிவம் இரண்டறக்கலந்து செயல் வடி வாகிறது.

★ மனிதர்கள் இழிவடைவது தீயொழுக்கத்தால். ★

நற்பண்புடைய எவனும் சுலபமாகக் கையாளக்கூடிய நேர்வழியானது அன்பு. அன்பு செலுத்தும் எவனிடமும் இறைவன் குடி கொண்டிருப்பதனால் இவன் மென்மேலும் சீறிய அன்பு நெறியைக் கடைப்பிடிக்க இறையொளி வழிகாட்டுகிறது. பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தும்ஒருவனுக்குத் தீயவழியில் வந்து கேடுசெய்யப் பிற உயிர்கள் விரும்புவதில்லை இதே நேரத்தில் அவனிடத்திற் குடிகொண்ட அன்புஎன்னும் சிவத்தின் ஒளி எத்தீயசக்தியையும் மழுங்கச்செய்யும் அன்பென்னும் நல்லபாதையிற் செல்பவனை அவன் தெரிந்தோ தெரியாமலோ பிறருக்குத் தீங்கு செய்யவிடாது அது தடைசெய்யும் இப்படியான அன்புள்ளங் கொண்டவனை எவரும் தெய்வமாகவே கருதுவர்,

எந்த அறிவில்லாதவனும் ஆழ்ந்து சிந்திப்பானாகிய அன்பென்னும் நல்ல வழியையே தெரிவுசெய்வான். அறிவில்லாதவன் அன்புவேறு சிவம்வேறு என்று பிதற்றுவான் அன்புதான் சிவமென அறியவும்மாட்டார். அன்புதான் சிவமென அறிந்திடுங்கால் அன்பே சிவம் என்று வாளா இருப்பர் என்பதனைத் திருமூலரும் பின்வருமாறு கூறுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாகும் அறிகிலார்
அன்பே சிவமாவதாகும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (270)

ஔவையாரிடம் முருகன் பெரியது யாதெனக் கேட்டபோது தொண்டர் உள்ளம் எனக் கூறினார். இறைவன் தன்னை உள்ளன்போடு வழிபடுபவரின் உள்ளத்தில் ஒடுங்குகிறார்.

தனது மதியூகத்தாற் கண்ணனைக் கட்டிவைத்துப் பாரதப் போரை நிறுத்தலாம் என்று கண்ணபிரானுக்குச் சகாதேவன் கூறக் கண்ணபிரானின் வேண்டுகோளுக்கிணங்க அன்பினால் அவன் கட்டினான். அன்பினால் ஆகாதது ஏதும் இல்லை.

அன்பேசிவம் எல்லாம் சிவமயமே என்றிருப்போர் சிவமாகவே காட்சியளிப்பர் சைவசமயிகளான நாம் எங்கள்வழி அன்புவழி இறைவழி என்று நன்மதிப்புடன் வாழவேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் எவரிடமும் சிவமாகிய அன்பைப் பொழிந்து சமயத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடுவோமாக.

★ வஞ்சகனின் புன்முறுவல் உதட்டிலிருந்து தோன்றும். ★

உ

# நடராஜ தத்துவம்

நா. நல்லதம்பி

"ஓம்" எனும் ஒலி வடிவானவன் இறைவன் எனக் கண்டவர்கள் நமது சைவ ஞானியர் இதனைச் சாதாரண அன்பர்களும் விளங்கிக் கொள்ளுமாறு நடராஜ உருவமாக வடித்து மகிழ்ந்தவர்கள் சிற்பிகள் நடனராஜனாக விளங்குபவன் சிவன்.

உலகிலுள்ள ஆன்மாக்களின் மலங்களைப் போக்கியருளுவதற்காகச் சிவபெருமான், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களையுஞ் செய்தருளுகிறான்.

நாம் ஆடல் அல்லது அசைதல் மூலந்தான் ஒரு செயலைச் செய்கிறோம். அதுபோலவே, சிவபெருமான் ஐந்தொழிலைச் செய்யும்போது ஆடல் செய்கின்றான், இது அவனது திருவிளையாடல்.

ஆடலுக்கு நடனம் என்றும் பொருள் உண்டு. சிவபெருமானுடைய ஆடலுக்குத் திருநடனம் என்று பெயர்.

இங்கே திருநடனஞ் செய்பவர் நடராஜர்.

நடராஜர், உலகத்தை இயக்குவதற்காகவே நடனமாடுகிறார். அவர் திறந்தவெளி அரங்கிலே அம்பலத்திலே ஆடுகிறார்.

"அறையில் ஆடித்தான் அம்பலத்தில் ஆட வேண்டும்" என்று ஒத்திகை பார்ப்பதில்லை அவர். நினைத்த மாத்திரத்தில் ஆடுவார். அவருடைய நடனக் கோலத்தை அப்பரடிகள் கண்டு களித்து இப்படிப் பாடுகின்றார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

மனிதப்பிறவியின் வேரறுத்து முத்திநிலை பெறமுடியலும் அப்பரடிகள் இந்த நடராஜ ருடைய நடனக்கோலத்தையும் அதன் தத்துவத்தையுங் கண்ட பின் இந்த மாநிலத்திலே தில்லை நடராஜருடைய ஆடலழகைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கு மானால். மனிதப் பிறவியும் தேவையானதே என்று பாடு கிறார் என்றால் இந்த நடராஜ கோலத்தின் மகிமைதான் என்னே!

நடனக்கோலத்தில் நிற்கும் சிவபெருமானுக்குக் கூத்தப் பெருமான் என்றும் பெயர். ஆடல், கூத்து என்பன ஒத்த பொருள் உடையன. ஆடலிலே அபிநயம் முக்கியமானது.

அபிநயக்கோலத்திலே, இறை வனின் பஞ்சகிருத்திய நடனக் கோலத்திலே உள்ள தத்துவங் களை ஓரளவிற் பார்ப்போம்.

அ. ஊன்றிய திருவடியாக நிற்கின்ற வலதுகால் முயலகன் மீது ஊன்றப் பெற்றிருக்கிறது. இந்த முயலகன் ஆணவத்தின் வடிவம் முயலகனது தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆணவத் தின் மிச்சசொச்சம் (வாசனா மலம்) முத்திநிலையிலும் தலை காட்டும் என்பதை விளக்கவே தலை தூக்கியபடி இருக்கிறது அவ்வாறு இருக்கும் முயலகன் மீது ஊன்றிய திருவடி பட்டத னால் ஆணவத்தின் வலிகெட்டுப் போகும். அந்த நிலையில் அவன் ஐந்தெழுத்தை ஓதினால், வாசனாமலமாக நிற்கும் ஆணவ மலம் முற்றாக நீங்கப்பெற்று முத்திநிலை வந்துசேரும் என்பது கருத்து.

ஆ. தூக்கிய திருவடியாகிய இடதுகால் குஞ்சிதபாதம் எனப் பெறுகிறது திருவடி தீட்சை கொடுத்து ஆன்மாக்களின் தீவினைகளை (தலைஎழுத்தை) அகற்றக் காத்து நிற்கிறது தூக்கியதிருவடி.

இ. இறைவன் வலது பின் கையில் உடுக்கை ஏந்திநிற்கிறார் இது படைப்புத் தொழிலைக் குறிக்கிறது

வலது முன்கை அபயகரமாக அஞ்சேல் என்னும் பாவனையில் அமைந்திருக்கிறது நாம் இருக்கப் பயமேன் என அருள்செய்வதற்கு ஆன்மாக்களை அழைக்கிற கை இது.

ஈ. இறைவனது இடது பின் கையிலே சுடர் காணப்படுகிறது அது அழித்தலைக் காட்டுகிறது

இடது முன்கரமானது வீசிய கரமாக தூக்கிய திருவடியைக் காட்டி நிற்கிறது. ஆன்மாக்க ளைத் தமது திருவடி நிழலுக்கு வருமாறு இறைவன் அழைக்கி றான் என்பது அதன் விளக்கம்.

★ கைக்கு அருகில் உள்ள முதல் கடமையை ஆற்றுங்கள் ★

இவ்வாறு அமையப்பெற்ற நடன நடராஜனுக்குப் பீடம், பதும, பீடமாகும். அதாவது இறைவன் ஆன்மாக்களின் இதய தாமரையில் வீற்றிருக்கிறான் என்றதத்துவத்தைக் குறிக்கிறது.

நடராஜ உருவத்தின் பின் திருவாசியாக இருப்பது ஓம் என்னும் பிரணவமாகும்.

ஆகவே ஓம் எனும் பிரணவ வடிவத்தினுள்ளே பஞ்சாட்சர மாக நடராஜர் விளங்குகிறார் என்பது பொருளாகும். எனவே ஓம் எனும் பிரணவ மந்திரத் தோடு நமசிவாய மந்திரமும் சேரச் செபித்தல் வேண்டும் என்பது புலப்படுகிறது.

நடராஜ நடனகோலத்தைச் சுற்றி திருவாசியிருக்க அத்திரு வாசியின் மேல் வளைவில் இருப் பவை அனற்கொழுந்துகள் அவை இறைவனது பேரொளி யைக் காட்டி நிற்கின்றன.

இஃதிங்ஙனமிருக்க பரத நாட்டியக் கலையானது சிவனிட மிருந்து பிறந்ததாகச் சொல்லப் பெறுகிறது.

சிவன் நந்திபகவானுக்குப் பரதக்கலையை உபதேசஞ் செய்ததாகவும் அவர் பரதமுனி வருக்குச் சொல்ல அப்படியே பரதக்கலை பரந்துபட்டு எல்லோராலும் அறியப்பட்ட தாகவும் சொல்லப் பெறுகிறது

சிவபெருமானது நடனக் கோலத்தைத் திருநாவுக்கரசர் நயந்து பாடியதுபோலப் பரத நாட்டிய நிகழ்ச்சியொன்றைக் கம்பர் பின்வருமாறு கண்டு களிக்கிறார்.

நெய் திரள் நரம்பின் தந்த மழலையின் இயன்ற பாடல்
தை வரு மகரவீணை தண்ணுமை தழுவித்தூங்கக்
கை வழி நயனஞ்செல்லக் கண்வழி மனமுஞ்செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்.

(கம்பர் - மிதிலை)

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து - சிவபுராணம்

★ உண்மையான அன்பைப் பேச்சின்மூலம் வெளிப்படுத்தமுடியாது ★

உ

# மனத்தூய்மையினால் மனக்கோவில் உருவாகும்

சிவ. சண்முகவடிவேல்

பாலை நகுபனி, வெண்மதி, பைங்கொன்றை,
மாலையுங் கண்ணியு மாவன சேவடி
காலையும் மாலையுங் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே. ( திருமுறை 4.



இது அப்பருடைய அருண்மொழி. நாலாம் திருமுறை சிவபெருமான் பாலை வென்ற வெண்மையான மதியை மாலையாக அணிந்தவர். பசிய கொன்றையை மாலையாகச் சூடுபவர் அவருடைய திருவடி செம்மையானது. ஆரூரில் அரநெறித் திருத்தலத்தில் எழுந்தருளி உள்ளார். காலையும் மாலையும் சென்று வழிபாடு செய்பவர்களுடைய மனம் எம்பெருமானுக்கு ஆலயம் ஆகும்.

எல்லாமாய் அல்லதுமாய் அப்பாலுமாய் விளங்கும் பெருமானார் திருக்கோவிலில் திகழ்வார்.

இரவு, பகல் பாராமல் எந்நேரமும் மறவாமையால் மகிழ்பவர்களுடைய மனம் இறைவனுக்கு ஆலயமாகும். அந்த உண்மையைப் பன்னிரு திருமுறைகள் நமக்கு உணர்த்துகின்றன.

திருப்புகலூர்ப் பெருமானைக்காண்பீடம் திருப்புகலூர்த் திருக்கோவிலும் என்நெஞ்சும், என்று ஆளுடைய அரசு அழுத்தம் திருத்தமாக அம்பலப்படுத்தும் அருமை இது.

" விண்ணி னார்மதி சூடிய வேந்தனைக்

..............................

★ நல்லொழுக்கத்தால் துயரங்கள் அழிகின்றன. ★

கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூரும்என் நெஞ்சுமே''

என்னெஞ்சுள் இறைவன் இருக்கையில் நாரணன் நான்முகன் எப்படி நாடிக் காண்பர்? என்று அருள்நகை தொனிக்கப் பாடுவார்.

'' நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்
தாடி பாதமென் நெஞ்சுள் இருக்கவே ''

என்னெஞ்சில் மாத்திரம் இறைவன் இருப்பதில்லை நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டவன். என்ற உண்மையையும், ''நினைப்பவர் மனங் கோயிலாக்கொண்டவன்'' என்று தமிழோடு இசைபாடல் புனைவார்.

ஞானசம்பந்தப் பெருமான் திருநெரிய தமிழை எடுத்த எடுப்பிலேயே... '' என்னுள்ளங் கவர் கள்வன் '' என்பர்.

''வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணை தடவி மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந் தென் உளமே புகுந்த அதனால்...'' என்று கோளறு திருப்பதிகத் திருப்பாட்டுப் பத்திலும் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாவலூர்த் திருப்பதிகத்தில்..

'' நெஞ்சங்கொண்டார் வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டார்'' என்று பெருமான் நெஞ்சிடங் கொண்டதை நினைவூட்டுவார்.

என் மனத்தில் உங்களை வைத்தீர்கள். அதனால் நான் எப்பொழுதும் மறவாமல் நினைக்கின்றேன் என்று திருவெண்ணெய் நல்லூர்ப்பதிகத்தில் நவில்வார்.

'எத்தான்மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்...''

வாதவூர்ப் பெருமானும் வாசகத்தைத் தொடுக்க எடுத்த எடுப்பிலேயே நெஞ்சையே இறைவன் இருப்பிடமாகக் கொண்டு பாடிய அருமை ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாழ்வாழ்க

★ தினமும் சிலமணி நேரம் தனிமையில் இரு. ★

பின்னரும் 'சிவபெருமான் தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான் என்று சிந்தனை செய்வார்

இவ்வாறு. ஆயிரம் ஆயிரமாகத் திருமுறைகளில் காணலாம் திருமூலரும்,

" உள்ளம் பெருங்கோயில் " என்பர்

நெஞ்சம் இடமாக, மனம் ஆலயமாக உள்ளம் பெருங் கோவிலாக இறைவன் எழுந்தருளச் சித்தமலம் அறவேண்டும் வாய்மை தூய்மையாக வேண்டும் நித்தலும் எம்பெருமானுடைய ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். திருமுறைகள் ஓத வேண்டும். நா நமச்சிவாயத்தை நவில வேண்டும், சலம்பூவொடு தூபம் நினைத்தல் வேண்டும், சிவதொண்டு புரிதல் வேண்டும், நீற்றினை நெற்றியில் நித்தமும் நிறையப் பூச வேண்டும். சிவனடியாரை வணங்க வேண்டும். சமய குரவர்களைக் கொண்டாட வேண்டும். இவ்வாறு பல்லாண்டு காலம் பணி செய்து ஒழுகமனம் பரிசுத்தம் அடையும், அங்கு கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

அவற்றிக்கு எல்லாம் மகுடம் வைப்பது போல அமையும் திருமந்திரம் இது.

" நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

திருக்கோவில் போலச் சிவபெருமான் மனக்கோவிலில் எழுந்தருள நால்வர் நமக்குக் காட்டும் நல்வழி இதுவாகும்.

---

## சுவாமி சிவானந்தரின் போதனைகள்

* யாராவது உன்னை அவமதித்தாலும், பரிகாசித்தாலும், கண்டித்தாலும் கோபம் கொள்ளாதே. அது வெறும் சொற்களே.
* பூரணத்தை அடையும் பாதையில் தீவிரமாகச்செல்.
* உனது வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைக் கடைப்பிடித்து, நிதானமாக முன்னேறு.
* சாந்தமாகவும் தைரியமாகவும் தடைகளை எதிர்த்து நில்.
* பிறரால் செய்யப்பட்ட கெடுதிகளை மன்னித்து மற, உன்னைப் பகைப்பவர்களுக்கும் நன்மையே செய்.

---

★ தன் மானமே ஒழுக்கத்திற்கு அடிப்படை. ★

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

## ( பதின்மூன்றாம் நாட்போர் )

## வீர அபிமன்யு

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

பதின்மூன்றாம் நாட்காலை பொழுது புலர்ந்தது. முதல்நாள் நடந்த போரிலும் யுதிஷ்டிரரைத்துரோணர் பிடிக்கமுயன்று, முடியாது போனமையால்க் கோபமடைந்தான் துரியோதனன். இதனால் அவன் துரோணரை மிகவும் நிந்தனை செய்தான். இதனாற்கவலையடைந்த துரோணர் துரியோதனனை நோக்கி " துரியோதனா! அர்ச்சுனனை ஒருவராலும் எளிதில் வெற்றிகொள்ளமுடியாது. அர்ச்சுனனின் பாதுகாப்பு இருக்கும் வரை யுதிஷ்டிரரை உயிருடன் பிடிக்க முடியாது. இன்றைய போரில்எவராவதுஒருமாவீரனை வதம் செய்வேன் " என்று கூறி யாராலும் உடைக்க முடியாத பத்ம வியூகத்தை. வகுத்துப் போரிட்டார். துரோணர் அணி வகுத்தபடையணிகளை திட்டத்துய்மன், அபிமன்யு, சாத்யகி, துருபதன், குந்தி, போஜன், நகுலன், சகாதேவன், முதலானோர் ஒன்றிணைந்து எதிர்த்துப் போரிட்டனர்.

துரோணர் மிக்க ஆக்ரோசத்துடன் போரிடுவதனைக் கண்ணுற்றயுதிஷ்டிரர் பாண்டவ சைனியத்தைக் காப்பாற்றும் பொருட்டு. தக்க ஒருவனை எதிர்த்துப் போரிட அனுப்பும் நோக்குடன் வீரத்தில் கண்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் நிகரான அபிமன்யுவை அழைத்து, "குழந்தாய்! துரோணர் வகுத்த பத்ம வியூகத்தை உடைத்து போரிடும் ஆற்றல்உனக்குத்தான் உண்டு. எனவே நீ முன்னின்று இவ்வியூகத்தை உடைத்து உட்புகுந்தாயானால் நாம் உன் பின் வந்து போரிடலாம். நீதான் இன்று பாண்டவ சைனியத்தைக் காப்பாற்ற வேண்டும் " என வேண்டிக் கொண்டார்.

★ ஆழ்ந்த அன்பிலேயே உண்மையான இன்பம் மலர்கிறது. ★

பெரிய தந்தையின் உரைகளைச் செவிமடுத்த அபிமன்யு ''தந்தையேவியூகத்தைஉடைத்து உட்புகுந்து செல்வேன். ஆனால் வெளியேவரும் உபாயத்தை நான் அறியவில்லையே என்ன செய்வது'' என்று வினாவினான் அப்பொழுது யுதிஷ்டிரர் ''நீ வியூகத்தை உடைத்து உட்புகும் வேளை நாம் நிச்சயம் பின் தொடர்ந்து உன்னுடன் வந்து போரிடுவோம் நீ தயங்காதே என்று அபிமன்யுவை ஊக்கப் படுத்தினார். உரையாடலைச் செவிமடுத்திருந்த பீமனும் நீ வியூகத்தை உடைத்து உட்புகும் வேளை நானும் உன்பின் தொடர்வேன்'' என்று உறுதி யளித்தான். இவர்களின் கூற்றுக் களினால் உற்சாகமடைந்த அபி மன்யு ''நிச்சயம் நான் துரோ ணர் வகுத்த இச்சிக்கலான வியூ கத்தை உடைத்து உட்புகுந்து பகைவர்களை அழித்தொழிப் பேன். இல்லையேல் யான் அர்ச் சுனன் புதல்வன் அல்லன்'' என்று உறுதியளித்து போரிட விரைந்தான்

போர்க்களத்தை நோக்கி சிங் கக்குருளை போன்று யுத்தசன் னனாய் அபிமன்யு அணிவகுத்து வருவதனைக் கவனம் செய்த துரோணர் அவனை நேரில் எதிர்த்து போரிட்டார். துரோ ணர் திறமையுடன் வகுத்திருந்த பத்மவியூகத்தை உடைத்து உட் புகுந்தான். மிக்க வீரத்துடன் எல்லோரையும் எதிர்த்துப்படை களை படுநாசம் செய்தான். அபிமன்யுவின் தாக்குதல்களால் கௌரவசேனை கதிகலங்கியது இதனைக் கவனித்த துரியோத னன் அபிமன்யுவை எதிர்த்தான் அபிமன்யுவின் வீரத்தை உணர்ந்த துரோணர் துரியோத னனைக் காக்கும் பொருட்டு படையின் ஒரு பிரிவினரை ஏவி, கிருபர் அசுவத்தாமன் சல்லியன் எல்லோரையும் ஒன்று சேர்த்து அபிமன்யுவுடன் போரிட்டார். துரியோதனன் கடுமையாக யுத் தம் செய்து களைப்படைந்தான். அர்ச்சுனன் புதல்வன் சளைக் காது தன்னை ஒன்று சேர்ந்து தாக்கிய அனைவரையும் கதி கலங்க வைத்தான். சல்லியன் அபிமன்யுவின் தாக்குதலினால் மூர்ச்சையடைந்தான். இதனால் கோபமடைந்த சல்லியனின் சகோதரன் அபிமன்யுவைத் தாக்கமுற்பட அவனை வெகு எளிதில் அபிமன்யு கொன் றொழித்தான்.

அபிமன்யுவின் தாக்குதலி னால்க் கௌரவசேனை திணறிக் களைத்தது. இதனைக் கவனித்த துச்சாதனன் அபிமன்யுவை எதிர்த்தான் அப்பொழுது அபிமன்யு அவனை மூர்க்க மாகத் தாக்கத் தொடங்கினான். அத்துடன் அவனை நோக்கி ''நீ தர்மம் அறிந்து நடக்காதவன். உன்னை நான் விடமாட்டேன்'' என்று கர்ஜனை புரிந்து அவனைப்

பலபாணங்களினால் அடித்தான். இதனால் மூர்ச்சை அடைந்து தேரில் அமர்ந்தான் துச்சாதனன் துரியோதனன் கர்னனை நோக்கி அபிமன்யுவைத் தாக்கும்படி உத்தரவிட்டான். கர்னனின் வில்லை அறுத்து அவனை நிலை குலைய வைத்தான் அபிமன்யு. கர்னன் படுகாயமடைந்து போர்க் களத்தை விட்டு நீங்கினான். அபிமன்யு களைப்படைவதாக உணர்ந்த யுதிஷ்டிரர் திட்டத் துய்மன் சிகண்டி முதலானோரு டன் அபிமன்யுவிற்கு உதவ விரைந்தார். யுதிஷ்டிரர் வியூகத் தினுள் உட்புகமுயல்வதைக் கவ னித்த ஜயத்திரதன் என்பான் வியூகத்தை அடைத்து ஒருவரும் உட்புகாதவாறு தடுத்துநிறுத்திப் போரிட்டான்.

இதனால் அபிமன்யு உள்ளே தனியே விடப்பட்ட நிலையில் சளைக்காதுபோரிட்டான். சல்லி யனின் புதல்வனைக்கொன்றான். கௌரவ சேனைக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தினான். இவ் வேளை துரியோதனன் மீண்டும் அபிமன்யுவை தாக்கினான். மீண் டும் களைப்படைந்து அப்பாற் சென்றான். இச்சந்தர்ப்பத்தில் துரியோதனனின் புதல்வன் இலக்குவன் அபிமன்யுவை எதிர்த்தான். அபிமன்யு அவ னைக் கொன்றான். தனது புதல் வன் இறந்தமையால்க் கோப மடைந்த துரியோதனன் எல்லோ ரையும் நோக்கி அபிமன்யுவைத் தாக்கும்படி கட்டளையிட்டான். இதனால்த் துரோணர் கிருபர் அசுவத்தாமன் கிருதவர்மா முத லானோர் ஒன்றாக அபிமன்யு வைத் தாக்கத் தொடங்கினர். அபிமன்யு வெகு திறமையாக எல்லோரையும் எதிர்த்துப்போரி டுவதனைக் கவனித்த துரியோத னன் அபிமன்யுவை வெற்றி கொள்ளும் வழி யாது எனத் தனது குருவிடம் கேட்கலானான் அப்பொழுது துரோணர் "நேர் நின்று தாக்கி அபிமன்யுவைக் கொல்ல முடியாது. பின்புறமாகச் சென்று அவனைத்தாக்குங்கள்" என்று ஆலோசனை கூறலா னார்.

துரோணர் கூறிய உபாயத் தைக் கைக்கொண்டு கர்னனும், கிருபரும் அபிமன்யுவின் பின் புறமாகச் சென்று நயவஞ்சகப் போர் புரியலாயினர். கர்னன் அபிமன்யுவின் கைவில்லைப்பின் பக்கமாகவே நின்று பாணங் களைத் தொடுத்து அறுத்து வீழ்த்தினான். கிருபர் தேர்ப் பாகனையும் துரோணர் குதிரை களையும் கொன்றனர். வில் இழந்து நிற்கும் திறல் வீரனை போர் நெறிமுறை தவறிய முறை யில் சரமாரியாகப் பாணங் களைத் தொடுத்துத் தாக்கினர் கௌரவப் படையினர். அர்ச்சு னன் மைந்தனல்லவா? சளைக் காது அபிமன்யு வாளொன்றைக்

கரத்தேந்தி வீராவேசமாகப் போரிட்டான். அந்த வாளையும் துரோணர் தனது பாணங்கள் பலவற்றைப் பிரயோகித்து உடைத்தார். ஒரு கணமேனும் தயங்காத அபிமன்யு உடனே சக்கரத்தைக் கையில் எடுத்தவனாய் யுத்தம் புரிந்தான். கண்ணபிரானை நிகர்த்த வீராதி வீரனாய் சற்றும் சளைக்காது அபிமன்யு போரிடுவதனைக் கண்ட கௌரவ சேனை ஒன்று திரண்டு அபிமன்யுவைச் சூழ்ந்து கொண்டு பலமாகத் தாக்கின. கௌரவசேனை அபிமன்யுவின் சக்கரத்தை பொடியாக்கின. உடனேகதாயுதத்தைக் கொண்டு தாக்க முற்பட்டான் அபிமன்யு. கதாயுதத்தை எடுத்தவேளையில் முன்நின்ற அசுவத்தாமனை பலமாகத் தாக்கத் தொடங்கினான்.

தனியே தாக்குதல்களை அதிக நேரம் செய்தமையால் அபிமன்யு சிறிது களைப்படைந்தான் பெரும் வீரர்களும் படையணிகளும் ஒன்றுசேர்ந்து வஞ்சகமாகப் போரிட்டமையால் சிறுவனான அபிமன்யு களைப்படைந்து மயக்கமாயினான். மயக்கமடைந்தவன் களைத்தவன், ஆயுதமிழந்தவன் என்போரைத் தாக்குதல் கூடாது என்ற தர்மநெறி முறைமையையும் மீறி, வஞ்சகனான துச்சாதனன் புதல்வன் அபிமன்யு மயங்கிய வேளை கதாயுதத்தால் அபிமன்யுவைப் பலமாகத்தாக்கினான். தாக்குதலினால்க் கண் விழித்த அபிமன்யு அவனுடன் பலமாகப் போரிட்டான், களைப்படைந்த நிலையில் போரிட்ட அபிமன்யுவை அவனால் எளிதில் தாக்கி அழிக்க முடிந்தது. இதனால் அர்ச்சுனனின் ஒப்பற்ற புதல்வனும், கண்ணபிரானின் மருகனுமாகிய பெருவீரன் அபிமன்யு வீரசுவர்க்கம் அடைந்தான்.

நேர் நின்று வெற்றிகொள்ள முடியாது என்று அறிந்து கபடமாக யுத்த நெறிமுறைமைகளையும் மீறித்தாக்குதல்களை மேற்கொண்டே கௌரவ சேனை அபிமன்யுவைக் கொன்றது. வஞ்சகமும் கபடமும் முதலில் வெற்றி தருமாயினும் முடிவில் அனர்த்தத்தையே உண்டு பண்ணும் என்பது இனிவரும் தொடர் மூலம் விளங்கும்.

[ தொடரும்... ]

★ ஒரு மனிதன் எப்படி இருந்தான் என்பது முக்கியமல்ல, அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம்.

★ புகழ்ச்சியை முட்டாள்களின் உணவு என்று கூறுவர், ஆனால் அறிஞரும் சில சமயங்களில் அதை உண்பதுண்டு.

★ நன்மையும், தீமையும் உனது வினைப்பயன். ★

# 17 - 02 - 2002 இல் இருந்து நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | |
|---|---|
| கு. அருணகிரிநாதன் ஆவரங்கால் | 1000 ... |
| பல. நோ. கூ. சங்கம் பருத்தித்துறை | 1 மூடை அரிசி |
| பல. நோ. கூ. சங்க சமாசம் யாழ்ப்பாணம் | 1 மூடை அரிசி |
| வ. கணபதிப்பிள்ளை கரவெட்டி | 1000 ... |
| K. குருபரன் அவுஸ்திரேலியா | 10000 ... |
| வ. துரைசாமி கருணாநிதி ச. ச. நிலையம் | 1000 ... |
| சோமசுந்தரம் பராசத்தி திருநெல்வேலி | 5000 ... |
| விஜயரெத்தினம் சங்கீத்தனன் பத்தமேனி | 5000 ... |
| தவராசா பொலிகண்டி | 500 ... |
| சி. குமாரசாமி ஆசிரியர் பத்தமேனி | 500 ... |
| தேவராசா இலங்கைவங்கி | 3000 ... |
| அன்பர் சுழிபுரம் | 5000 ... |
| இ. செந்தூரன் A. G. A. லேன் வல்வெட்டித்துறை | 1000 ... |
| மு. தேவராசா நீர்வேலி வடக்கு | 500 ... |
| சி. தங்கவடிவேலு நெல்லண்டைவீதி துப்பளை பருத். | 4000 ... |
| ஸ்ரீ. நதியா நகைமாடம் யாழ்ப்பாணம் | 4000 ... |
| S. பாலசிங்கம் மூலம் சைவமுன்னேற்றசங்கம் லண்டன் | 300 பவுண் |
| ச. வைத்தியநாதக் குருக்கள் கந்தவன ஆலய பிரதமருகு பொலிகண்டி | 2000 ... |
| சி. சிவயோகராஜன் நாவலர்வீதி யாழ்ப்பாணம் | 1000 ... |
| தாமோதரம் பிள்ளை குடும்பம் கரவெட்டி | 1000 ... |
| சத்தியதேவி நாவலர் றோட் யாழ்ப்பாணம் | 1000 ... |
| சின்னத்தம்பி சிவகுமார் பொலிகண்டி | 1000 ... |
| திருமதி அ. குணநாயகம் ( அமராரேடர்ஸ் ) திருநெல்வேலி | 4000 ... |
| T. தியாகலிங்கம் S. V. M. யாழ்ப்பாணம் | 1 மூடை அரிசி |
| ம. இந்திராதேவி கனடா | 2000 ... |
| S. S. மகேந்திரன் கனடா | 1500 ... |
| தி. துஷ்யந்தன் கனடா | 1500 ... |
| சீதா தியாகராசா சுண்டுக்குளி | 1000 ... |
| பெ. பற்குணராசா மயிலங்கூடல் | 1000 ... |
| ந. தவகுமாரன் பலாலி வீதி கோண்டாவில் | 10000 ... |

★ மிகுந்த பொறுமையும் விடாமுயற்சியும் கொள். ★

| | |
|---|---|
| சிதம்பரேஸ்வரசர்மா கிருஸ்ணமூர்த்தி அச்செழு | 1 மூடை அரிசி |
| சி. இராசரெத்தினம் தவமகால் பத்தமேனி | 1 மூடை அரிசி |
| இ. சுப்பிரமணியம் ஆசிரியர். உண்டுவத்தை அல்வாய் | 1000 ... |
| S. சுதாகரன் (ஜேர்மனி) கரவெட்டி | 1500 ... |
| Dr. பொன் சின்னத்தம்பி பாலகுமார் லண்டன் | 3000 ... |
| துர்க்கை அம்மன் தேவஸ்தானம் தெல்லிப்பழை | 10000 ... |
| திரு. திருமதி ச. நந்தகுமார் மானிப்பாய் | 1000 ... |
| ஆறுமுகசாமி இராசா கொழும்பு | 5000 ... |
| தவப்பிரகாசம் தம்பதிகள் | 10, 000 ... |
| பொ. பாலசுந்தரம் தம்பதிகள் | 10, 000 ... |
| மு. ஞானவேல் கிழக்குத்தெரு வல்வெட்டித்துறை | 3000 ... |
| திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் இராமநாதன் கல்லூரி மருதனார்மடம் | 1000 ... |
| T. விஸ்வலிங்கம் சைவசித்தாந்த மன்றம் கனடா | 50 க. டொலர் |
| சுப்பிரமணியம் பகீர் உரும்பராய் | 2500 ... |
| நடராசா இரத்தினகோபால் கொழும்பு | 1000 . |
| சிவலிங்கம் சிவபாக்கியம் கனடா | 5950 ... |
| ம. இந்திராதேவி கனடா | 2000 ... |
| தம்பிராசா இணுவில் | 1 மூடை அரிசி |
| சந்திரபிரபா புஸ்பராணி உடுப்பிட்டி | 5000 ... |
| கிருஷா சதீஸ் (சுவிஸ்) அச்சுவேலி தெற்கு | 9000 ... |
| ம. ஸ்ரீகாந்தன் அச்சுவேலி தெற்கு | 2000 ... |
| K. பாலசுப்பிரமணியம் கொழும்பு | 1000 ... |
| வ. வேலும்மயிலும் குடும்பம் திருமலை | 2000 ... |
| N. சிவபாலன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் | 1000 ... |
| S. உமாசுதன் கியூபுளொக் கொழும்பு | 1000 ... |
| திருநாவுக்கரசு சற்குணமாலினி மட்டக்களப்பு | 500 ... |
| திருமதி பூபாலன் ஜேர்மனி | 1000 ... |
| இரத்தினசபாபதி பத்மலோயினி புலோலிதெற்கு | 1500 ... |
| வடிவேலு பாலச்சந்திரன் குடும்பம் பிரான்ஸ் | 5000 ... |
| S. நடேசன் குடும்பம் கொழும்பு | 2000 ... |
| பரமநாதன் சுகர்ஷினி, ,, ரவிசங்கர் } கொழும்பு | 1000 ... |
| சண்முகநாதன் கரணவாய் மத்தி | 2000 ... |
| ஜெயா விஜயாபதி பிரான்ஸ் | 1000 ... |
| நடேசபிள்ளை கல்வியங்காடு | 1500 ... |
| ம. ஸ்ரீகாந்தன் அச்சுவேலி தெற்கு | 2000 ... |

★ உனது எண்ணங்கள் யாவற்றையும் கட்டுப்பாட்டில் வை. ★

| | |
|---|---|
| வ. ஆறுமுகம் அதிபர் ஆவரங்கால் | |
| ந. சத்தியானந்தன் உரும்பராய் மேற்கு | 1000 ... |
| ச. ஹரிஹரன் உரும்பராய் மேற்கு | 500 ... |
| மணிவாசகம் குடும்பம் வட்டு கிழக்கு | 1000 ... |
| கந்தையா குடும்பம் கோண்டாவில் கிழக்கு | 1000 ... |
| K. சபாபதிப்பிள்ளை அவுஸ்திரேலியா | 3000 ... |
| சி. இரத்தினசபாபதி கன்னாதிட்டி ஒழுங்கை யாழ் | 1000 ... |
| மா. சச்சிதானந்தன் புங்குடுதீவு | 1000 ... |
| கௌரிசுரேசன் ஆவரங்கால் | 250 ... |
| இ. காண்டீபன் ஊரெழு கிழக்கு | 500 ... |
| ஞா. சின்னையா லண்டன் | 2000 ... |
| Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் | 50000 ... |
| அப்புக்குட்டி குடும்பம் தாவடி | 1000 ... |
| இரத்தினபாலன் லண்டன் | 1000 ... |
| தங்கவேலாயுதம் குடும்பம் கொக்குவில் மேற்கு | 1000 ... |
| கார்த்திகேசு மகேஸ்வரி கோப்பாய் லண்டன் | 5000 ... |
| கு. தனராஜசிங்கம் ஏழாலை மேற்கு (ஜேர்மனி) | 4000 ... |
| க. முத்துவேலு ஆசிரியர் இமையாணன் | 500 ... |
| S. சிவலிங்கராசா முதுநிலை விரிவுரையாளர் | 1000 ... |
| க. சதாசிவம் அந்திரான் கரவெட்டி | 1000 ... |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ். | 1000 ... |
| அ. இராசேந்திரம் இமையாணன் வடக்கு | 500 ... |
| V. நடராசா கொக்குவில் | 2000 ... |
| சுசீலா நகைமாடம் பருத்தித்துறை | 4000 ... |
| து. சுந்தரதாஸ் குடும்பம் (லண்டன்) | 10000 ... |
| லோகேஸ்வரி சிவபாதசுந்தரம் லண்டன் | 25 பவுண் |
| V. மாணிக்கவேல் கொழும்பு | 500 ... |
| பொ. பிரபாகரன் தாவடி | 1000 ... |
| இ. இரவீந்திரன் இரத்தினகிரி கச்சாய்வீதி கொடி. | 5000 ... |
| மயில்வாகனம் வீரசூரியர் லண்டன் | 4000 ... |
| இ. ஞானசேகரம் புத்தூர் மேற்கு | 2000 ... |
| ஆனந்தராசா சங்கீதா<br>நடராசா<br>திலகராணி ஆனந்தராசா | 10000 ... |
| ஆ. விநாயகமூர்த்தி சாளம்பை கரணவாய் | 1000 ... |
| ந. வில்வநாதன் யாழ்ப்பாணம் | 1000 ... |
| தி. விசயரெட்ணம் வசாவிளான் | 1000 ... |

★ எப்பொருளிலும் யாரிடத்திலும் பற்று வைக்காதே. ★

| | |
|---|---|
| சுந்தரலிங்கம் கிருஷா கரவெட்டி | 4000 ... |
| ச. ஜெயதாசன் செந்தாவளவு இருபாலை | 500 ... |
| திரு. திருமதி சிவகுருநாதன் லண்டன் | 2000 ... |
| க. சிவகுமார் கல்வயல் சாவகச்சேரி | 5000 ... |
| குலநாயகம் ராஜகுலேஸ்வரா | 18547 60 |
| ஜெ. ஜெயச்சந்திரன் துன்னாலை | 2000 ... |
| S. பாலகுமார் யாழ்ப்பாணம் | 1000 ... |
| S. ஸ்ரீரங்கநாயகி தர்தி உத்தியோகத்தர் யாழ். | 1500 ... |
| செங்கோ குடும்பம் இடைக்காடு | 500 ... |
| திருமதி கந்தசாமி லண்டன் | 20 பவுண் |
| திரு. திருமதி ஈஸ்வரலிங்கம் குடும்பம் அவுஸ்திரேலியா | 250 பவுண் |
| வ. ஆறுமுகம் (அதிபர்) ஆவரங்கால் | 2000 ... |
| தி. சிவனேசம்பிள்ளை இடைக்காடு | 4000 ... |
| A. லோகேஸ்வரன் கொழும்பு | 3000 ... |
| நா. சண்முகராசா கோண்டாவில் | 1000 ... |
| Dr. K. சிவஞானசூரியர் கொழும்பு | 4000 ... |
| அபிராமி, டிலுக்கா } கொழும்பு | 1000 .. |
| S. செல்வலிங்கம் கொழும்பு | 2200 ... |
| ம. ஸ்ரீகாந்தா அச்சுவேலி தெற்கு | 1000 ... |
| தி. தெட்சணாமூர்த்தி இணுவில் | 500 ... |
| திருமதி தே. கலைமதி கனடா | 2700 ... |
| ஏ. நடராசா சிவானந்தா றோட் கொழும்பு | 1000 ... |
| சுப்பிரமணியம் வையாபுரி | 1 மூடை அரிசி |
| மு. கணேஸ் இணுவில் | 2 மூடை அரிசி |
| து. சுந்தரதாஸ் குடும்பம் (வண்ணம்) லண்டன் | 20000 ... |
| வைஸ்ணவி நகைப்பூங்கா நெல்லியடி | 500 ... |
| S. K. குருபரன் கைதடி | 1000 ... |
| பொ. பாலசிங்கம் களஞ்சியப் பொறுப்பாளர் அச்- ப. நோ. கூ. ச. | 1 மூடை அரிசி 25 கிலோ பருப்பு |
| க. இரத்தினம் G. S. கரணவாய் | 1000 ... |
| க. நவரெத்தினம் கொக்குவில் | 2250 ... |
| ந. துரைராசா மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை யாழ். | 10000 ... |
| சுசீலா நகைமாடம் பருத்தித்துறை | 2000 ... |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் சங்கானை | 1000 ... |
| முருகுப்பிள்ளை முரளிதரன் வல்வை | 5000 ... |
| துரைராசா ஜெயதரன் | 1000 ... |
| திரு. சிவலோகலிங்கம் கொழும்பு | 500 ... |

| | |
|---|---|
| S. ஸ்ரீவாமதேவன் கனடா | 5000 ... |
| சுதாகரன் இந்துஜா கோண்டாவில் | 1000 ... |
| அ. ஜெயசீலன் குடும்பம் உருத்திரபுரம் | 1000 ... |
| மு. கணேசு இணுவில் 10 கிலோ பயறு 2 மூடை தீட்டல் | |
| S. P. M. சோதி நோர்வே | 3000 ... |
| பொ. சோமசுந்தரம் தெகிவளை | 1000 ... |
| ஐ. தங்கேஸ்வரன் இலங்கை வங்கி கொழும்பு | 2 மூடை அரிசி |
| க. சிவநாதன் மருதம் நெல்லியடி | 2 மூடை |
| த. மணிதரன் மாயவா ஸ்ரோர்ஸ் புலோலி | 1 மூடை |
| க. சிவானந்தராசா ( குட்டி ) கலிகை | 1 மூடை |
| த. ஜெயபாலசிங்கம் ( ஜெயம் ) கரவெட்டி மத்தி | 1 மூடை |
| ஜெகா மோட்டோர்ஸ் நெல்லியடி | 1 மூடை |
| கண்டி பற்றிக் சென்ரர் கொழும்பு | 2 மூடை |
| செல்லமுத்தூஸ் நெல்லியடி | 2 மூடை |
| புவனேந்திரராசா செல்லப்பிள்ளையார் நெல்லியடி | 2 மூடை |
| கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம் நெல்லியடி | 1 மூடை |
| சற்குணம் லவ்லி றைக்கோடிங் சென்ரர் | 1 மூடை |
| த. உதயகுமார் ( பவுன் ) 52 / 1796 கலட்டி | 1 மூடை |
| ந. பாலசுப்பிரமணியம் லவ்லி கூல்பார் நெல்லியடி | 1 மூடை |
| சண்முகநாதன் ஜனணி வெதுப்பகம் பொலிகண்டி | 1 மூடை |
| மாயவா ஸ்ரோர்ஸ் நெல்லியடி மத்தியசந்தை | 1 மூடை |
| நக்கீரன் றோயல் தொலைத்தொடர்பகம் துன்னாலை | 1 மூடை |
| ரகுநாதன் ஸ்ரீ ஜெயா நெல்லியடி | 1 மூடை |
| ஆ. மயில்வாகனம் நாகர்கோவில் | 1000 ... |
| அரவிந்தன் குடும்பம் லண்டன் | 3000 ... |
| T. R. கனகலிங்கம் குடும்பம் கொலின்வூட் பிளேஸ் கொழு. | 2000 |
| செல்லத்துரை கண்மணி ஆஸ்பத்திரி வீதி அச்சுவேலி | 2000 ... |
| திருமதி த. கணபதிப்பிள்ளை சாயிஇல்லம் புட்டளை | 500 ... |
| ந. இரத்தினசிங்கம் துன்னாலை தெற்கு கரவெட்டி | 3000 ... |
| வாசுகி தேவதாஸ் அண்டர் சன்பிளாட்ஸ் கொழும்பு | 1000 ... |
| இளையதம்பி இராசலிங்கம் நோர்வே | 2000 ... |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் கொழும்பு | 1000 ... |
| சிரோணி கந்தசாமி, செந்தூரன் கந்தசாமி } 1ம் குறுக்குவீதி பருத்தித்துறை | 5000 ... |
| க. அருமைராசா அளவெட்டி | 250 ... |
| செ. விநாயகசுந்தரம் நீர்வேலி வடக்கு | 1000 ... |

[ வளரும்......

★ உண்மை கனமானது; ஆகவே அதைச்சுமப்பவர்கள் சிலரே. ★

உ

# அரை நிமிட நேரம்

சி. யோகேஸ்வரி

குறிஞ்சித் தெய்வமாகக் குமரனைக் கொண்டாடுவது தமிழர் மரபு. ஈழமணித் திரு நாட்டில் கதிர்காமத்திலே மலை மீது கோவில் கொண்டு, அனைவருக்கும் அருள் வழங்கி நிற்கின்றான் முருகன். அவன் அங்கு குடிகொண்டதாலே சீரும் சிறப்பும் திகழுமிடமாகக் கதிர்காமம் ஆகிவிட்டது.



ஞானச்சுடரான, அழகுத் தெய்வமான, அருட்சோதியான கந்தன் வீற்றிருப்பதால் கதிர்காம மலைச்சிகரமே சோதிமயமாகிவிட்டது. சோதிமயமான அந்தக் கதிர்காமச் சிகரத்தில் நெடுவேலொடு நிற்கும் முருகனிடம் பக்தி கொண்டு துதிப்போர் பல்லாயிரக்கணக்கானவர்கள். அன்றுமுதல் இன்றுவரை இவ்வாறு தன்னை நம்பி வழிபட்ட பக்தர்களுக்கு எத்தனை அற்புதங்கள் செய்து அருள்பாலித்திருக்கிறான் அந்தக் கதிர்காமக் கந்தனென்பது எமக்குத் தெரியாதது.

தங்கள் குறைகளையும் துயர்களையும் வேதனைகளையும் தீர்க்குமாறு வேண்டித்துதித்துச் சென்றவர்களுக்கு அவற்றைத் தீர்த்து, அருள்பாலிப்பான் கார்த்திகேயன். ஒவ்வொருவரது குறைதீர்த்த கதையும் ஓர் அற்புத நிகழ்வாகவிருக்கும். அத்தனை அற்புதங்களையும் கண்டவரோ கேட்டவரோ இருக்கமுடியாது. அந்தச் செவ்வேள் செய்த அற்புதங்கள் பலகோடியாகும்.

★ ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப்பண்பை அறியலாம். ★

அத்தகைய வேலவனின் திருப்பாதங்களைக் கும்பிடும் பேறுபெற்றால் எவ்வளவு அதிர்ஷ்டம்! ஆனால் அந்தப் பேறு பெறவேண்டுமென நம்மில் எத்தனை பேர் மனப்பூர்வமாக அவாவுறுகின்றோம்? கதிர்காமத்திற்குப் போக எல்லோருக்கும் விருப்பமே. அது அந்த வேலவனின் திருப்பாதங்களை அரை நிமிடநேரமாவது தியானித்து உய்வுபெறுவதற்காகவோ? என்றால் அது ஐயமே.

ஆனால் அந்த நெடுவேலோன் திருப்பாதங்களைக் கும்பிட்டால் நமது குறைகள் தீரும். துயரங்கள் போகும். அற்புதங்கள் நிகழும். அவை மட்டுமல்ல, அதற்கும் மேலானதொன்றையும் அடையலாம். அதுவும் எளிதாக அடையலாம். ஆம். எல்லாவற்றிற்கும் மேலானதான பேரின்ப வீட்டினை எளிதாக அடைந்து விடலாம். ஆன்மா சென்றடைய வேண்டிய இடம் எத்தனையோ பிறவிகளெடுத்தும் பிறவிப்பிணியொழிந்து வீட்டின்பம் பெறுவது மிகக்கடினம். ஆனால் "கதிர்காமக் கந்தனின் திருப்பாதங்களைக் கும்பிட்டால் மிக எளிதாக அந்த வீட்டின்பம் கிடைத்துவிடும்'' என்று கதிர்காமப்புராணத்தில் உயர்திரு சி. நாகலிங்கம் பிள்ளை கூறுகிறார்.

சீர்திகழுங் கதிர்காமச் சோதிமலைச் சிகரமீது
பார்திகழு மற்புதங்கள் பலகோடி செய்தருளுங்
கூர்திகழு நெடுவேலோன் திருப்பாதங் கும்பிடுவோ
நேர்திகழும் பேரின்ப வீடடைத லெளிதாமே.

கதிர்காமப் புராணம்

எனவே அவனது திருப்பாதங் கும்பிட வாரீர்.

---

நம்மைச் சுற்றி நல்லது நடந்தாலும் கேடு நிகழ்ந்தாலும் கவனித்து வைத்துக் கொள்ள வேண்டும் கவனித்ததை ஆராய்ந்து அசட்டுத் தன்மானத்தையும், பயனற்றதையும் தீமைவிளைவிப்பதையும், நோவு தருவதையும் விலக்குவதோடு வெற்றியை வளர்ப்பதையும், நம்பிக்கை ஊட்டுவதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கடவுள், பக்தனைக் காந்தக்கல் ஊசியை ஈர்ப்பது போல கவர்கிறார். ஆனால் சில வேளைகளில், பக்தனின் பிரேம பக்தியினால், கடவுள் ஊசியாகவும் பக்தன் காந்தக்கல்லாகவும் மாறுகிறார்.

★ வாழ்க்கையில் இலட்சியம் இருக்கும். ★

உ [தொடர்ச்சி...

# ஔவையார் அருளிய ஆத்திசூடி

## ( உரையும் விளக்கமும் )

முனைமுகத்து நில்லேல்

முனைமுகத்து - சண்டை முகத்திலே, நில்லேல் - ( நீ போய் ) நில்லாதே.

வீண் சண்டையிடுவோரை வேடிக்கை பார்க்க அந்தஇடத்திற்குப் போகாதே.

முனைமுகம் - சண்டையிடும் இடம் ( 91 )

மூர்க்கரோ டிணங்கேல்

மூர்க்கரோடு - அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல் நீ சிநேகம் - பண்ணாதே.

துஷ்டரைக் கண்டால் தூர விலகத்தானே வேண்டும். அறிவற்ற ஆத்திரக்காரர்களோடு பழகாதே - விலகி இரு என்கிறார் ஔவையார்.

( 92 )

மெல்லினல்லா டோள்சேர்

மெல் - மெல்லிய, இல் - ( உன் ) மனையாட்டியாகிய, நல்லாள் பெண்ணினுடைய, தோள் - தோள்களையே சேர் - நீ சேர்.

இதனாலே, பிறர் மனைவியர், பரத்தையர் என்கிற இவர்களை ஒருபோதும் விரும்பாதே என்பது பெறப்படும்.

உன் வீட்டில் நிம்மதி நிலவினாற்றான் வாழ்க்கையில் அமைதி காணலாம் ஆதலால் இல்லத்தை விளங்க வைப்பவள் இல்லாள்; உன் மனைவி. மனைவியோடு சேர்ந்து நல்வாழ்க்கை நடத்து என்று ஆசி கூறுகிறார் ஔவைப்பாட்டி.

( 93 )

மேன்மக்கள் சொற்கேள்

மேன்மக்கள்- மேன்மையாகிய மனிதருடைய, சொல்-சொல்லை கேள் - நீ கேட்டு நட.

பெரியோரின் அறிவுரைகளைக் கேட்டு நட. ( 94 )

★ உண்மையான நம்பிக்கை உள்ளத்திலுள்ளது ★

மைவிழியார் மனையகல்

மைவிழியார் - மை தீட்டிய கண்களையுடைய வேசிகளது, மனை - வீட்டை, அகல் - ( நீ ஒருபோதும் கிட்டாமல் ) அகன்றுபோ

நீங்கள் இல்வாழ்க்கை நடத்தும்போது பரத்தையர் வீட்டுப் பக்கமாகக் கூடப் போகக்கூடாது ( 95 )

மொழிவ தறமொழி

மொழிவது - சொல்லப்படும் பொருளை, அற - ( சந்தேகம் ) நீங்கும்படி, மொழி - நீ சொல்லு.

கூறும் விடயத்தை ஐயத்துக்கு இடமில்லாமல் திருத்தமாகக் கூறவேண்டும். ( 96 )

மோகத்தை முனி

மோகத்தை ( நிலையில்லாத பொருள்களின் மேலதாகிய ) ஆசையை முனி - கோபித்து விலக்கு.

ஆசையை வெறுத்து ஒதுக்கு ( 97 )

வல்லமை பேசேல்

வல்லமை உன்னுடைய சாமர்த்தியத்தை, பேசேல் (நீ புகழ்ந்து பேசாதே.

உங்கள் திறமையைப்பற்றி நீங்களே புகழ்ந்து பேசாதீர்கள் ( 98 )

வாதுமுற் கூறேல்

வாது - வாதுக்களை, முன் - ( பெரியோர் ) முன்னே, கூறேல் நீ பேசாதே

பெரியவர்கள் விவாதிக்கும் போது சிறுவர்களான நீங்கள் குறுக்கே பேசக்கூடாது ( 99 )

வித்தை விரும்பு

வித்தை - கல்விப்பொருளை, விரும்பு - நீ விரும்பு.

அழியாத செல்வமான கல்விச் செல்வத்தையே நீ விரும்பித் தேடிக்கொள் என்கிறார் ஔவைப்பிராட்டி ( 100 )

வீடுபெற நில்

வீடு - மோட்சத்தை. பெற - அடையும்படி, நில் - ( அதற்குரிய ஞான வழியிலே ) நில்.

இவ்வுலகில் எல்லோரும் போற்றும்படி ஒழுக்கமுள்ள வாழ்வு வாழ வேண்டும். அதன் பிறகு வீடு பேறடைய இறைவனை இடைவிடாது வழிபட வேண்டும். ( 101 )

★ படகு நீரில் இருக்கலாம் ஆனால், நீர் படகிலிருத்தலாகாது ★

உத்தம னாயிரு

உத்தமனாய் -( நற்குண நற்செய்கைகளினாலே எல்லோரிலும்) மேலானவனாகி, இரு - இரு ( வாழ்ந்திடு )

எண்ணம், செயல்களினால் உயர்ந்து மேம்பட்டவனாக வாழ்பவனே உத்தமன். நீயும் அப்படி இரு. ( 102 )

ஊருடன் கூடி வாழ்

ஊருடன் - ஊரவர்களுடனே, கூடி ( சுபா சுப கருமங்களிலே ) அளாவி, வாழ் - நீ வாழு.

ஊரவர்களுடன் இணைந்து செயற்படுதலே சிறந்த சமூக வாழ்க்கை முறையாகும் ( 103 )

வெட்டெனப் பேசேல்

வெட்டு என -கத்தி வெட்டைப்போல, பேசேல்- ( ஒருவரோடுங் கடினமாகப் ) பேசாதே.

பிறர் மனம் நோகும்படி உன் கருமம் கெடும்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசாதே. ( 104 )

வேண்டி வினைசெயேல்

வேண்டிய - ( யாதொரு பிரயோசனத்தை ) விரும்பி, வினை தீவினையை, செயேல் - ( நீ ஒருவனுக்கும் ) செய்யாதே.

பயனை எதிர்பார்த்துப் பணிபுரியாதே. ( 105 )

வைகறைத் துயிலெழு

வைகறைத் - ( நீ தினந்தோறும் ) விடியற்காலத்திலே, துயில் எழு - நித்திரை விட்டு எழுந்திரு.

அதிகாலையிலே ( சூரியோதையத்துக்கு முன்பு ) துயிலெழுதல் நன்று. ( 106

ஒன்னாரைத் தேறேல்

ஒன்னாரை - பகைவர்களை, தேறேல் - ( நீ ஒருபோதும் ) நம்பாதே.

நல்லவர்கள்போல் நடிக்கும் நயவஞ்சகர்களின் ஆசை வார்த்தைகளை நம்பாதே ( 107 )

ஓரஞ் சொல்லேல்


ஓரம்- பக்ஷபாதத்தை, சொல்லேல்- ( நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

எந்தக் கட்சியிலும் இணையாமல் நடுநிலை வகித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்கிறார் ஔவையார். (முற்றும்) ( 108)

உ

# சந்நிதியான்

-ந. அரியரத்தினம்-




[சென்றவாரத் தொடர்ச்சி......

சந்நிதியான் ஆச்சிரமம் பொதுவைத்திய சேவையை மட்டுமன்றி கண்வைத்தியசேவை கண்ணாடி வழங்கும் செயற்பாடு என்பவற்றுடன் சிறப்பாக மகப்பேற்று வைத்திய சேவையை மேற்கொண்டு வருவதனை சென்ற மலரிலே குறிப்பிட்டிருந்தோம்.

மகப்பேற்று வைத்திய சேவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற ஆரம்பித்த நிகழ்

வும், இங்கே இந்த வைத்திய சேவை நடைபெற்றுக் கொண் டிருக்கின்ற முறையும் இந்த வைத்தியசேவையை நடாத்திக் கொண்டிருக்கும் மகப்பேற்று வைத்தியநிபுணர் தொடர்பான செயற்பாடுகளும் சாதாரண விடயங்களாகக் கருதக்கூடியவை அல்ல.

மகப்பேற்று வைத்திய சேவை ஆச்சிரமத்தில் ஆரம் பித்த நிகழ்வே ஒரு அற்புத நிகழ்வாகும் சந்நிதியான் ஆச்சிர மத்தில் பொது வைத்திய சேவை ஆரம்பித்த பொழுது துறை சார்ந்த வைத்திய சேவையாக மகப்பேற்று வைத்திய சேவையை யும் ஆச்சிரமத்தில் ஆரம்பிக்க விருப்பம் இருந்தாலும் அது பெண்களுடன் சம்பந்தப் பட்டி ருந்தமையாலும் அத்தகைய வைத் தியவசதிகளை தனியாகஏற்படுத் துவதற்கு ஆச்சிரமம் பொருத்த மான இடமாக அமைய முடியுமா என்ற கேள்வியும் பலருடைய மனதில் எழுந்ததையும் சுவாமி கள் கருத்தில் கொண்டார்கள்.

இத்தகைய நிலமைகளால் மகப்பேற்று வைத்தியசேவையை ஆச்சிரமத்தில் ஆரம்பிப்பதில் சுவாமிகள் மனச்சஞ்சலப் பட் டாலும் மகப்பேற்று வைத்திய சேவையை ஆச்சிரமத்தில் ஆரம் பிப்பது என்ற முடிவை சுவாமி கள் தனது மனத்திலிருந்து ஓரங்கட்ட முடியாத நிலையில் ஏதோ சந்நிதியான் விட்ட வழியே நடக்கட்டும் என எண் ணிக்கொண்டு 14 - 10 - 2001ல் இருந்து ஆச்சிரமத்தில் பொது வைத்திய சேவையை ஆரம்பிக்க முடிவு செய்தார்கள்.

மேலும் திருமதி பவானி அவர்கள் தனது வைத்திய சேவையை தொழிலாக மட்டு மன்றி சேவையாகவும் நினைத்து இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் செயற்படுத்து கின்ற முற்போக்கான ஒரு பெண் மணி என்பதை மட்டும் ஏற்க னவே நாம் ஓரளவு அறிந்திருந் தோம். இந்தவகையில் பொது வைத்திய சேவையை முதலில் ஆரம்பிப்பதென்றும் அதன் பின் நாம் அவரிடம் சென்று எமது தூய்மையான பணிகள் பற்றி எடுத்துக்கூறி அந்தப்பணியில் அவரது பங்களிப்பையும் வழங்கு மாறு கேட்பதற்கு முடிவு செய்திருந்தோம்.

இந்த நிலையில் திருமதி பவானி அவர்களுடன் நாம் எவ் வித தொடர்பும் ஏற்படுத்தா திருந்த நிலையிலேயே எமது பொது வைத்தியசேவை ஆரம் பிக்கப்பட்ட நிலையில் 04 - 11 - 2001 அன்று காலை மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி பவானி அவர்கள் ஆச்சிரமத்திற்கு நேரடியாக வருகை தந்தது மட்டுமல்ல நீங் கள் இங்கே வைத்திய சேவையை ஆரம்பிக்க இருப்பதாக அறிந் தேன் அதில் நானும் எனது பங்களிப்பைவழங்க ஆயத்தமாக இருக்கின்றேன் என சுவாமி களிடம் கூறுகின்ற அதிசயம் ஒன்று நடந்தேறியது.

இவ்வாறு திருமதி பவானி அவர்களே நேரடியாக வருகை தந்து தனது சேவையை வழங்க முன்வந்த செய்தியைக் கேட்ட சுவாமிகள் சந்நிதியானுடைய திருவிளையாடலையும், உள்ளத்தில் ஏற்பட்ட ஆச்சரியத்துடன் கூடிய மனத்திருப்தியையும் அப்படியே அந்தநேரம் முழுமையாக திருமதி பவானி அவர்களுக்கு வெளிக்காட்டாது தனது வழமையான பாணியில் நல்லதம்மா! மிகவும் சந்தோஷம் என்று கூறி இன்முகத்துடன் அவரை உபசரித்தார்கள். அத்துடன் அவருடைய மகப்பேற்று வைத்திய சேவையை ஆரம்பிக்கும் நாளையும் அப்பொழுதே முடிவு செய்து அதற்கிணங்க 18-11-2001ம் திகதி ஆச்சிரமத்தில் மகப்பேற்று வைத்திய சேவையும் ஆரம்பிக்கப்பட்டது

திருமதி பவானி அவர்களது வைத்தியசேவை ஆச்சிரமத்தில் ஆரம்பிக்கப்பட்டது எவ்வளவு ஆச்சரியம் தரும் நிகழ்வாக இடம்பெற்றதோ அதேபோன்று சந்நிதியானிடம் வந்து தனது சேவையை வழங்க முன்வந்தது அவருக்கும் அது ஒரு அதிசய நிகழ்வாகவே நடந்தேறியதை அவரே எம்மிடம் எடுத்துக் கூறினார்கள்

உடுப்பிட்டி சந்தைவீதியில் ஆனந் தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான கு. ஆனந்தகுமார் என்பவர் உடுப்பிட்டியில் மகப்பேற்று வைத்தியசேவையை ஆரம்பிப்பது தொடர்பாக தன்னிடம் பலமுறை வந்துகேட்டும் அதற்கு தான் மறுத்து விட்டதாகவும் இறுதியாக வந்து தன்னிடம் கேட்டபொழுதும் தான் அங்கே செல்ல மறுத்ததாகவும் அந்த நேரம் ஆனந்தகுமார் உடுப்பிட்டி என்பது சந்நிதிகோவிலுக்கு கிட்டஉள்ள ஒரு கிராமம் நீங்கள் உடுப்பிட்டிக்கு வந்தால் சந்நிதியானையும் தரிசிக்கலாம் என்று கூறியபொழுது தனது உள்ளத்தில் மின்னல் ஏற்பட்டது போன்ற ஒரு உணர்வினால் தூண்டப்பட்டு உடுப்பிட்டிக்கு வைத்தியசேவையை வழங்க வருவதற்கு சம்மதித்தது பற்றியும் அதைத் தொடர்ந்தே சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெறும் வைத்திய சேவையிலும் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற இறையருளின் சிறப்பைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம் ஆனால் இங்கே சந்நிதியானுடைய சந்நிதிதானத்தில் கேட்கவும் தேவையில்லை நினைக்கின்ற பொழுதே நல்ல காரியங்கள் எல்லாம் நடந்தேறுகின்ற விந்தை தான் நடைபெற்

★ நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை அமைக்கின்றது. ★

றுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய விந்தைகளைச் செய்யும் சந்நிதியானுடைய பாதங்களைப் பணிவதற்கு எமக்குள்ள இரண்டு கரங்கள் மட்டும் போதுமானவையா? இல்லை இல்லை இரண்டாயிரம் கரங்கள் அல்லவா எமக்குத் தேவைப்படுகின்றன.

மகப்பேற்று வைத்திய சேவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற முறைகூட அனைவரது உள்ளங்களையும் தொடுவதாகவே உள்ளது. திருமதி பவானி அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வழங்கப்படும் தன்னுடைய வைத்திய சேவையையே மிகமுக்கியமான தொன்றாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் எத்தனை எண்ணிக்கையான தாய்மார்கள் சேவை பெற வந்தாலும் இன்முகத்துடன் அனைவருக்கும் தனிப்பட்ட கவனத்துடன் சிகிச்சை அளிப்பது சிகிச்சை பெற வருகைதந்த அத்தனை தாய்மார்களுக்கும் முழுமையான மன நிறைவைத் தருகின்ற ஒரு விடயமாகவும் உள்ளது.

இன்று வைத்தியசேவை கூட பல இடங்களில் முழுமையாக பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்படும் பொழுது..இல்லை! இல்லை! வைத்திய சேவை என்பது ஒரு புனிதமான சேவை என்று நாங்கள் இளமையில் புத்தகங்களில் படித்ததை உறுதிப்படுத்துகின்ற உண்மையான விடயம் என்பதை நேரடியாகப் பார்வையிட விரும்புகின்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவதாக திருமதி பவானி அம்மா அவர்களது வைத்திய சேவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. வைத்திய சேவையைப் பெறுகின்ற தாய்மார்கள் அனைவரும் உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து உள்ளப்பூரிப்புடன் வீடு திரும்புகின்ற அதே வேளை இத்தகைய ஒரு மகப்பேற்று வைத்திய சேவையைப் பெற்றுக் கொண்டதற்காக நாங்கள் இன்று மட்டுமல்ல என்றுமே நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்ற உணர்வலைகளுடன் பிரிந்து செல்வது உண்மையில் மனித நேயத்தின் ஒரு உச்சக்கட்டம் என்றே கூறவேண்டும்.

இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த வைத்திய சேவையை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவசமாக வழங்குவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ள திருமதி பவானி அம்மா அவர்கள் இதற்கும் மேலாக மேற்கொண்டு வரும் செயற்பாடு உண்மையில் எங்கள் உள்ளங்களை எல்லாம் உருக்குவதாக அமைந்து விட்டது.

ஆம்! திருமதி பவானி அம்மா அவர்கள்ஆச்சிரமத்திற்கு சேவை செய்கின்ற தினம்

வடமராட்சியில் வேறு இடங்களில் தனது சேவையை வழங்குவதால் கிடைக்கும் வருமானம் முழுவதையும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவசமாக வழங்கப்படும் வைத்தியசேவை போன்ற மனித நேயச் செயற்பாடுகளுக்காகவே பயன்பட வேண்டுமென்று சந்நிதியான் ஆச்சிரமத்திற்கே அந்தப் பணம் முழுவதையும் அன்று தொடக்கம் இன்று வரை அன்பளிப்பாக தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார். இதை சாதாரண ஒரு விடயமாகவோ அல்லது சாதாரணமானவர்கள் செய்யும் விடயமகாவோ கருதி விட முடியுமா?

இவ்வாறான தொண்டுள்ளம் படைத்தவர்கள் இந்த மண்ணில் வாழ்வதால் உண்மையில் இந்த மண் அல்லவா சிறப்புப்பெறுகின்றது தாயுள்ளம் எப்படிப்பட்டது என்பதைவிளங்கிக்கொள்வதற்கு பவானி அம்மா அவர்களது இந்த தொண்டு உள்ளம் எமக்கெல்லாம் உதாரணயாக அமைந்து விட்டது மேலும் படித்தவர்கள் பதவியில் உள்ளவர்களால் எமது சமயம் எவ்வாறு சிறப்படைய முடியும் என்பதற்கு இவரது வாழ்க்கை எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அமைவதையும் யாரும் மறுக்க முடியுமா? அது மட்டுமா இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டே மகத்தான வாழ்க்கையை வாழலாம் என்பதை புலம் பெயர்ந்தவர்களும் புரிந்து கொள்வதற்கு திருமதி பவானி அம்மா அவர்களது வாழ்க்கைப் பயணம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது எனக்கூறலாம்.

ஆம்! அவரை இந்த நிலைக்கு ஆற்றுப்படுத்திய பெற்றோர், அந்நியநாட்டில் கடமையாற்றிக் கொண்டிருந்தாலும் பவானி அம்மா அவர்கள் தாய் நாட்டிற்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்கிக்கொண்டிருப்பதற்கு தனது முழுமையான ஆதரவை வழங்கிக்கொண்டிருக்கும் அவரது கணவர், பல தாய்மார்களது நோய்களைத் தீர்ப்பதற்காக தனது தாயை நீண்ட நேரம் பிரிந்திருக்கும் அவரது குழந்தை இவர்கள் அனைவருமே இந்தப் புனித சேவையின் பங்காளர் தான்.

அடியவர்களுக்காகவும் வாழ்க்கையில் அல்லல் படுபவர்களுக்காகவும் சந்நிதியான் ஆச்சிரமம் பவானி அம்மா போன்றவர்களின் ஒத்துழைப்புடன் இத்தகைய நல்ல காரியங்களை எல்லாம் ஆற்றுவதற்குக் காரணமாக இருக்கும் கலியுகக்கந்தனது திருவிளையாடலையும், திருவருளையும் எங்களால் அளவிடத்தான் முடியுமா?

ஓம் முருகா!

உ

## மயில்வாகன சுவாமிகளின்

# 18வது ஆண்டு குருபூசைத்தினம்



மேற்படி குருபூசை 04 - 08 - 2003 திங்கட்கிழமை எம்பெருமான் சந்நிதியானுடைய ஆலயத்தில் இடம் பெற்ற விஷேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி குருவருளின் சிறப்பை எல்லோருக்கும் வெளிப்படுத்தக் கூடிய வகையில் இடம் பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் :

ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்தினார்கள். அவர்தனது தலைமையுரையில் மயில்வாகனசுவாமிகள் இறைவன் மீது சாதாரண பக்தி கொண்டவர் அல்ல அவர் இறைவன் மீது ஆழமான பக்தியைச் செலுத்தினார். அதனால் தான் அவர் தனது வாழ்க்கை முழுவதையும் இறைவழிபாட்டிலும் இறை தொண்டிலும் முழுமையாகச் செலுத்தக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு உண்மையான, ஆழமான பக்தியை இறைவன் மீது செலுத்த வேண்டுமென்பதைத்தான் புராணங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். வேடுவ குலத்தில் பிறந்திருந்தும், சமய அனுட்டானங்களைப் பற்றி தெரிந்திருக்காத நிலையிலும் சிவபெருமான் மீது ஆழமான அன்பு கொண்டு நாங்கள் எல்லோரும் வியக்கும் வகையில் உருக்கமான வழிபாட்டைச் செலுத்தியதனால் ஆறுநாட்களிலேயே கண்ணப்பநாயனார் இறைவனைக் காணுகின்ற நிலையை அடையமுடிந்தது.

இதுபோன்ற ஆழமான பக்தியைச் செலுத்திய மயில்வாகன சுவாமிகளைக் குருவாகக் கொண்டு இங்கே சந்நிதியான் ஆச்சிரமம் செயற்படுவதால் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் சிறப்பாகவே அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

★ போலியான நண்பனை விட வெளிப்படையான எதிரியே மேல். ★

ஆறுதிருமுருகன் :

குருபூசைத் தினத்தில் சிறப்புச் சொற்பொழிவினை ஆறுதிரு முருகன் அவர்கள் வழங்கினார்கள். தனக்காக வாழாது பிறருக்காக வாழுகின்ற ஒரு சிறப்பான செயற்பாட்டை மயில்வாகன சுவாமிகள் மேற்கொண்ட முறையை அடியார்களுக்கு ஆறுதிருமுருகன் எடுத்துக் காட்டினார்கள். இதனால் தான் 18 வருடங்கள் சென்ற பின்பும் அவரை நினைவு கூர்ந்து அவருக்குப்பூசை செய்து அவரது செயற் பாட்டை தொடருகின்ற நிலை இங்கே காணப்படுவதையும் எடுத்து விளக்கினார்கள்.

கண்ணாடி வழங்குதல் :-

குருபூசை தொடர்பாக ஏற்கனவே அறிவித்ததற்கிணங்க கண் வைத்திய நிபுணர் திரு. S. குகதாசன் அவர்களால் பாடசாலை மாண வர்களுக்கான கண்பரிசோதனை ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்பட்டு 24 மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட் டன.

துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல் :-

கல்வியில் ஆர்வமுள்ள பின்வரும் இரு மாணவிகளுக்கு சந்நிதி யான் ஆச்சிரமத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

1. செல்வி ஞானேந்திரன் கேதீஸ்வரி - யா/சிதம்பரக் கல்லூரி
2. செல்வி குலேந்திரன் துசித்தா - யா/தொண்டைமானாறு வீ. ம, வித்தியாலயம்

தையல் மிசின் வழங்கல் :-

லண்டன் சிவயோகம் நிறுவனத்தின் அனுசரணையுடன் சித் தங்கேணியைச் சேர்ந்த திருமதி இந்துமதி அவர்களுக்கு தையல் மிசினும் வழங்கப்பட்டது.

குருபூசைத்தினம் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக் கிடையே பேச்சுப்போட்டி நடாத்தப்பட்டிருந்தது. இதில் வெற்றி பெற்ற பிள்ளைகள் தமது பேச்சுவன்மையை சபையில் வெளிப்படுத் துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில் வழங்கப்பட்டு செயலாளரின் நன்றியுரை யுடன் நிகழ்வு திருப்தியாக நிறைவு பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம

சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

# ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய
# வருடாந்த மஹோற்சவ கால
# தெய்வீகக் கலை நிகழ்ச்சிகள்

28 - 08 - 2003 வியாழன் 2-ம் நாள்

விடயம் : **"பஜனை"**

வழங்குபவர்கள் : சாயி மன்றம்

(வடபிராந்திய சாயி சமித்திகள்)

29 - 08 - 2003 வெள்ளி 3-ம் நாள்

**ஞானச் சுடர் மாத வெளியீடு** (ஆவணி மலர்)

30 - 08 - 2003 சனி 4-ம் நாள்

சொற்பொழிவு : **'ஞானாகரன்'**

வழங்குபவர் : சுவாமி சித்ரூபானந்தா

(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்)

31 - 08 - 2003 ஞாயிறு 5-ம் நாள்

சொற்பொழிவு: **நெஞ்சக் கனகல்லு**

வழங்குபவர் : ச. லலீசன் (ஆசிரியர்)

01 - 09 - 2003 திங்கள் 6-ம் நாள்

சொற்பொழிவு : **கம்பசித்திரம்**

வழங்குபவர்: செஞ்சொற் செல்வன். இரா செல்வவடிவேல்

02 - 09 - 2003 செவ்வாய் 7-ம் நாள்

சொற்பொழிவு:

**மெய்ப்பொருள் ஈகுவையோ**

வழங்குபவர்: தி. சிவதெட்சணாமூர்த்தி

(இளைஞர் சேவைமன்றம்)

03 - 09 - 2003 புதன் 8-ம் நாள்

சொற்பொழிவு:

**செந்தூரில் நின்றாடும் தேவன்**

வழங்குபவர் : சைவப்புலவர் சி. வேலாயுதம்

04 - 09 - 2003 வியாழன் 9-ம் நாள்

சொற்பொழிவு: **கடம்பனும் இடும்பனும்**

வழங்குபவர் : அருட்கவி சி. விநாசித்தம்பி

05 - 09 - 2003 வெள்ளி 10-ம் நாள் பூங்காவனம்

சொற்பொழிவு : **யாரொரு நோக்கேன்**

வழங்குபவர் : ஆ. சிவநாதன் ஆசிரியர் (ம. மா. வி. நெல்லி.)

06 - 09 - 2003 சனி 11-ம் நாள்

சொற்பொழிவு :

**கல்லிலும் கடவுள் உள்ளான்**

வழங்குபவர்: சைவப்புலவர் கீழ்கரவை நவம்

07 - 09 - 2003 ஞாயிறு 12-ம் நாள்

**சந்நிதியான் தொகுப்பு நூல்வெளியீடு**

08 - 09 - 2003 திங்கள் 13-ம் நாள் சப்பறம்

சொற்பொழிவு பொன்னும் மெய்ப்பொருளும்

வழங்குபவர் : திரு ச. விநாயகமூர்த்தி ( *விரி. யாழ் பல். க.* )

## 09-09-2003 செவ்வாய் தேர்உற்சவம்

## 10-09-2003 புதன் தீர்த்தோற்சவம்

உ

# ஞானச்சுடர் சந்தாதாரர்களுக்கு
## அன்பான வேண்டுகோள்

மேற்படி 2003 ஆம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தைச் செலுத்தி எமது ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஆதரவை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

காசுக்கட்டளை:

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
**தொண்டைமானாறு**

காசோலை;

**செ. மோகனதாஸ்**
**க. / இல. D 7481**
**இலங்கை வங்கி**
**பருத்தித்துறை**

## T. P. No. 021 - 2263406

மேலும் ஆச்சிரமப் பணிகளுக்கு உதவி புரிய விரும்புவோர் மேலே குறிப்பிட்டவாறு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

புதிதாக ஞானச்சுடர் சந்தாதாரராகச் சேரவிரும்பினால் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
பேரவையினர்

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

05 - 09 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில்

**உற்சவ கால நிகழ்வு**

சொற்பொழிவு - ' யாரொடு நோகேன் '

வழங்குபவர் - திரு. ஆ. சிவநாதன் (ஆசிரியர்)

---

12 - 09 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

**பாடசாலை மாணவர் உரை அரங்கம்**

---

19 - 09 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை - திரு. செ. நடராசா J. P.

சொற்பொழிவு : பெரியபுராணம் ( தொடர் )

வழங்குபவர் - சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்

( யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை )

---

26 - 09 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# புரட்டாதி - 2003

வெளியீட்டுரை : அ. த. க. கிருஸ்ணராசா J. P.

மதிப்புரை :- புத்தொளி ந. சிவபாதம் J. P.

பதிவு இலக்கம்;- Q. D. / 58 / NEWS / 2003

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2003 ஜனவரி- ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2004 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும். அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு